# ...ன டைம் MONEY மர்டர்

## ராஜேஷ்குமார்

**1**



''குட்மார்னிங் ஸார்....'' சொல்லிக்கொண்டே எடிட்டர் ஆடலரசின் அறைக்குள் நுழைந்தாள் அருணா. 23 வயது அருணா எம்.ஏ. ஜெர்னலிஸம் படித்தவள். பியூட்டி பார்லர்க்குப் போக வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு அழகாக இருப்பவள்.

''குட்மார்னிங்...! வாம்மா அருணா... உனக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கேன்.''

''எதுக்கு ஸார்...?''

''இந்த வாரத் தலையங்கத்தை இப்பத்தான் எழுதி முடிச்சேன்...! நீ ஒரு பார்வை பார்த்துட்டா கம்போஸிங் செக்ஷனுக்கு அனுப்பிடலாம்...''

''தலையங்கம் எதைப் பத்தின மேட்டர் ஸார்?''

''கேவலமாகிவரும் காவல் துறையைப் பற்றிய தலையங்கம். போன வாரம் எழுதப்பட்ட தலையங்கத்தோட தொடர்ச்சிதான் இது... கொஞ்சம்



'ஹார்ஷா' வார்த்தைகளைப் போட்டிருக்கேன். உனக்குப் பிடிக்கலைன்னா மூவ் பண்ணிரு.''

அருணா சிரித்தாள். ''ஸார்...! நீங்க ஹைட்ரோக்ளோரிக் அமிலம்ன்னா, நான் நைட்ரிக் அமிலம். நீங்க தலையங்கம் எழுதி வெச்ச பேப்பரைத் தொட்டாலே சூடாக இருக்கும். நான் தலையங்கம் எழுதினாலே பேப்பர் தீப்பிடிச்சுக்கும்ன்னு எல்லாரும் சொல்வாங்க. ஸோ... நான் உங்க தலையங்கத்தைப் படிச்சா இன்னும் ஹார்ஷாத்தான் வார்த்தைகளைப் போடுவேன்... அதுக்கு சம்மதம்ன்னா சொல்லுங்க ஸார். உங்க தலையங்கத்தைப் படிக்கறேன்.''

ஆடலரசு அருணாவையே பார்க்க... அவள் கேட்டாள், ''என்ன ஸார் அப்படி பார்க்கறீங்க...?''

''நான் உன்னைப் பார்க்கல்லேம்மா. உனக்குள்ளே இருக்கிற தைரியத்தை பார்த்துட்டு இருக்கேன்... உன்னோட அப்பா உயிரோடு இருந்திருந்தார்ன்னா எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார் தெரியுமா?''

''அந்த சந்தோஷத்தைப்படத்தான் நீங்க இருக்கீங்களே ஸார்...?''

இண்டர்காம் கூப்பிட்டது. ஆடலரசு பட்டனை அழுத்திவிட்டு,

''என்ன?'' என்றார்.

மறுமுனையில் உதவியாசிரியர் கமலப்பித்தன் பேசினார். ''ஸார்...! உங்களைப் பார்த்துப் பேச அஸிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர் டேனியல் மாணிக்கம் வந்திருக்கார்.''

''விபரம் என்னான்னு கேட்டியா?''

''கேட்டேன் ஸார்...! பர்சனலா உங்களைப் பார்க்கணுமாம்...''

''வரச்சொல்லு...! அவர் கூட வேற யாராவது வந்து இருக்காங்களா?''

''இல்ல ஸார்''

''சரி... அனுப்பு...'' ஆடலரசு பட்டனைத் தட்டி இண்டர்காமை அணைத்துவிட்டு அருணாவை ஏறிட்டார்.

''ஏ.சி. டேனியல் மாணிக்கம் உன்னைப் பார்க்க வந்திருக்காராம்...''

''போன வாரத் தலையங்கத்தைப் படிச்சிருப்பார். காக்கி யூனிஃபார்முக்குள்ளே இருதயம் கூசியிருக்கும். உடனே வந்துட்டார்.''

அருணா சொல்லிக் கொண்டிருக்கும்போதே அறைக்குள் வெளியே பூட்ஸ் சத்தம் கனமாய்க் கேட்டது.

தொடர்ந்து கதவைத் திறந்து கொண்டு அஸிஸ்டண்ட் கமிஷனர் டேனியல் மாணிக்கம் ஆறரையடி உயரத்தில் போலீஸுக்கே உரிய தேகாப்பியாச உடம்போடு உள்ளே நுழைந்தார். மேல் உதட்டில் தேவாரம் டைப்பில் மீசை.

ஆடலரசு எழுந்து கும்பிட்டார்.

''வாங்க... ஏ.சி.ஸார்....''

டேனியல் மாணிக்கம் இறுக்கமான முகத்தோடு ஆடலரசுக்கு எதிரேயிருந்த ஒரு நாற்காலிக்குச் சாய்ந்தார். சில விநாடி மௌனத்துக்குப் பிறகு இரண்டு முழங்கைகளையும் மேஜை மேல் ஊன்றிக் கொண்டு மெல்லி குரலில் கேட்டார். ''உங்க 'கவசம்' பத்திரிகையோட சர்குலேஷன் எவ்வளவு?''

''எதுக்காக கேட்கறீங்க...?''

''சும்மா... தெரிஞ்சுக்கிற ஒரு ஆர்வம்தான்.''



''வாரத்துக்கு நாலு லட்சம் போகுது...''

''அந்த திமிர்லதான் கண்டபடி தலையங்கம் எழுதறீங்க போலிருக்கு...?''

''ரொம்பவும் சூடா வந்திருக்கீங்க. கூலா ஏதாவது கொண்டு வரச் சொல்லட்டுமா ஏ.சி. ஸார்?''

டேனியல் மாணிக்கம் அந்த கிண்டலைப் பொருட்படுத்தாமல் கேட்டார்.

''போன வாரத் தலையங்கத்தை எழுதினது யாரு?''

அருணா குறுக்கிட்டு சொன்னாள்.

''நான்தான்...''

டேனியல் மாணிக்கத்தின் பார்வை அவள் மேல் கோபமாய் நிலைத்தது. ''உனக்கு எவ்வளவு தைரியம் இருந்தா போலீஸ் டிபார்ட்மெண்டைப் பத்தி அவ்வளவு கீழ்த்தரமா எழுதியிருப்பே...?''

அருணா புன்னகைத்தாள். ''என்ன ஸார் இப்படி சொல்றீங்க... தலையங்கம் கீழ்த்தரமாகவா இருந்தது?''

''பின்னே... காவல் துறையை 'ரவுடிகளின் கூடாரம்'ன்னு எழுதியது நீதானே... போலீஸாரைப் பார்த்தா உனக்கு ரவுடிகள் மாதிரியா தோணுது...?''

''ஸார்... உங்க போலீஸ் டிபார்ட்மெண்ட்டை 'ரவுகளின் கூடாரம்'ன்னு நான் சொன்னதில் எந்த தப்பும் கிடையாது. போன வாரம் அயனாவரம், கோகுலம் காலனியில் நள்ளிரவில் ரெண்டு லாரி போலீஸ் வந்து ரெய்ட் என்கிற பேரில் பண்ணின அராஜகத்தை போட்டோக்களாக எடுத்து ஆல்பம் பண்ணி முதலமைச்சர்க்கும் கவர்னருக்கும் அனுப்பி வெச்சிருக்கோம். அந்தப் போட்டோக்களை எல்லா

பத்திரிகைகளுக்கும் கொடுத்து பிரசுரம் பண்ண வெச்சோம். போலீஸார் செய்த கீழ்த்தரமான இந்தச் செயலை எல்லா பத்திரிகைகளும் கண்டித்தது போலவே நாங்களும் எங்க பாணியில் கண்டிச்சோம். இதில் என்ன தப்பு...?''

''தலையங்கத்தில் எழுதப்பட்ட வார்த்தைகள் சரியில்லை. கோகுலம் காலனியை நாங்க ஏன் ரெய்ட் பண்ணினோம் தெரியுமா...?''

''தெரியும்... யார் வீட்டிலேயோ போதை மருந்து இருந்ததாக தகவல் கிடைச்சிருக்கு. அந்த வீடு எதுன்னு சரியாக தெரியாத நிலையில் எல்லா வீட்டிலேயும் புகுந்து சோதனை போட்டிருக்கீங்க. உங்க போலீஸ் தரப்புல சொல்லப்பட்ட காரணம் இதுதானே....?''

''ஆமா...!''

''போதை மருந்து கிடைச்சுதா?''

''கிடைக்கலை...''

''ஏன்...?''

''பொய்யான தகவல்ன்னு பின்னாடி தெரிஞ்சுது.''

''ஏன்... அதை ரெய்டுக்கு போறதுக்கு முன்னாடியே பொய்யான தகவல்ன்னு கண்டுபிடிக்க முடியாதா...? லாரி லாரியா போலீஸ் போய் இறங்கி தூங்கிட்டிருந்த ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் மிருகத்தனமா அடிச்சு எழுப்பி வீட்டை விட்டு வெளியே துரத்தின பிறகுதான் தெரிஞ்சுதா...?''

''இதோ பார்... உண்மையைக் கண்டுபிடிக்கிறதுக்காக போலீஸ் எடுக்கிற சில முயற்சிகள் கடுமையாகத்தான் இருக்கும். நாங்க போட்டிருக்கிறது காக்கிச் சட்டை. காவித் துணி கிடையாது.''



''காக்கிச் சட்டை போட்டுக்கிட்டா உங்களுக்கு இருதயம் இரும்பாயிடுமா...?''

''ஏய்... நீ அதிகமா பேசறே...?''

''நான் இப்போ பேசிகிட்டு இருக்கிறது ரொம்ப ரொம்ப குறைச்சல்... அஸிஸ்டெண்ட் கமிஷனர் ஸார்... அன்னிக்கு கோகுலம் காலனியில் உங்கள் போலீஸ் படை புகுந்து போதை மருந்துகளைத் தேடுகிற சாக்கில் பெண்கள்கிட்டே தவறாக நடக்கப் பார்த்து இருக்காங்க...''

''பொய்...''

''பொய் பேசி எனக்குப் பழக்கம் இல்லை ஏ.சி. ஸார். உங்க போலீஸ் ஆட்கள் பெண்கள் கிட்டே தவறாக நடக்க முயற்சி பண்ணினதுக்கு போட்டோ ஆதாரங்கள் இருக்கு. அந்தப் போட்டோக்களையெல்லாம் வெளியிட்டா சம்பந்தப்பட்ட பெண்கள் பாதிக்கப்படுவாங்க என்கிற ஒரே ஒரு காரணத்துக்காக அதை பத்திரிகைகளில் வெளியிடாமே வெச்சிருக்கோம்.''

டேனியேல் மாணிக்கம் தன் இடதுகையின் விரலை ஆக்ரோஷமாய் உயர்த்தினார்.

''இதோ பார்...! போலீஸ் ஒரு விஷயத்தில் நடவடிக்கை எடுக்கும்போது கடுமையாக நடந்துக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும். அதையெல்லாம் பூதக்கண்ணாடி வெச்சு பெரிசு படுத்தக் கூடாது. ஆனா நீ பெரிசு பண்றே...ஒரு பெரிய பத்திரிகை கையில் இருக்குங்கிற திமிர்ல, பேனாவை எப்படி வேணும்ன்னாலும் வளைச்சு எழுதலாம்ன்னு நினைச்சா போலீஸ் அதை வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்காது...''

''அப்படீன்னா நீங்க என்ன அட்டூழியம் பண்ணினாலும் அதைப் பார்த்துட்டு 'ஜே' போடச் சொல்றீங்களா...?''

போலீஸோட நடவடிக்கைகளை கண்டு காமே இருந்தா போதும்...''

அருணா கோபமாய் ஏதோ பேச முயல, டேனியல் மாணிக்கம் கையமர்த்தினார்.

''இனி.... நீ ஒன்னும் பேச வேண்டாம். போனதெல்லாம் போகட்டும். இப்ப நான் எதுக்காக வந்திருக்கேன்ங்கிற விஷயத்தைச் சொல்லிடறேன். போன வாரம் உங்க பத்திரிகையில் போலீஸ் துறையை தாக்கி தலையங்கம் எழுதினதுக்கு வருத்தம் தெரிவிச்சு ஒரு அறிவிப்பு போட்டுடுங்க...''

''மறுப்பு அறிவிப்பா...?''

''ஆமா...''

''ஸாரி ஏ.சி. ஸார்... அது மாதிரியான கெட்ட பழக்கமெல்லாம் எங்க பத்திரிகைக்குக் கிடையாது. போன வாரம் எழுதப்பட்ட தலையங்கம் ரொம்பவும் சாஃப்ட் ஆக இருந்ததாக வாசகர்கள் ஃபீல் பண்ணினதாலே இந்த வாரமும் உங்க காவல் துறையைத் தாக்கி கடுமையா ரெண்டாவது தலையங்கத்தை எழுதி வெச்சிருக்கோம். அதைத் தான் வரப்போகிற இஷ்யூவில் போடப் போறோம்....''

டேனியல் மாணிக்கத்தின் கண்கள் கோபத்தில் ஈஷிக் கொண்டு சிவப்பேறியது. ஆடலரசை ஏறிட்டார்.

''அப்படின்னா வருத்தம் தெரிவிக்க மாட்டீங்க...?''

''வருத்தம் தெரிவிக்க வேண்டியது நாங்க கிடையாது ஸார். நீங்கதான்...! மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டிய நீங்களே ரவுடிகள் மாதிரி செயல்பட்டா மக்கள் யார்கிட்ட போய்



றமிடுவாங்க...? போதை மருந்து ச்சிருக்கிற நபரைக் கண்டுபிடிக்கணும்ன்னா நனையோ புத்திசாலித்தனமான வழிகள் இருக்கு. தயெல்லாம் விட்டுட்டு ராத்திரி வேளையில் மூடிக் கொள்ளைக்காரர்கள் மாதிரி காலனிக்குள் ந்து மக்களைப் பந்தாடியது எந்த விதத்தில் ''

டேனியல் மாணிக்கம் கோபமாய் நாற்காலியைத் ளிக் கொண்டு எழுந்தார்.

''முடிவா என்ன சொல்றீங்க... வருத்தம் ரிவிப்பீங்களா... மாட்டீங்களா...?''

''நீங்க போய்ட்டு வரலாம். அடுத்த இஷ்யூ பந்தப்பட்ட வேலைகள் நிறைய இருக்கு. ண்டு பேர் வேற இன்னிக்கு லீவு...''

''இது போலீஸ் கமிஷனரோட உத்தரவு.''

''சீஃப் மினிஸ்டரே உத்தரவு போட்டிருந்தாலும் ங்க பதில் இப்படித்தான் இருக்கும்... பத்திரிகை ந்திரத்தில் தலையிட இந்த நாட்டு பிரதமர்க்கே ட உரிமை கிடையாது.''

''இப்படி பேசினதுக்கான விளைவுகளை வெகு கிரமே சந்திப்பீங்க...''

''அப்படி ஏதாவது எங்களுக்கு ஏற்பட்டா தன் முதலா கைது செய்யப்படுகிற ஆள் ங்களாத்தான் இருக்கும். எப்படின்னு கட்கறீங்களா ஏ.சி. ஸார்? கொஞ்சம் சிரமம் ார்க்காமே திரும்பி இந்த அறையின் நான்கு பிங் கார்னர்களையும் பாருங்க...''

டேனியல் மாணிக்கம் குழப்பமாய் திரும்பிப் ார்த்தார். முகம் வியர்வைக்குட்பட்டது.

வீடியோ கேமராக்களின் கண்கள் சுவரோடு வராய் பதிக்கப்பட்டிருந்தன.

ஆடலரசு சிரிப்போடு தொடர்ந்தார்.

''ஏ.சி. ஸார்...! நீங்க இந்த அறைக்குள்
காலடி எடுத்து வெச்ச விநாடியிலிருந்து இ
விநாடி வரைக்கும் நீங்க எங்களை மிரட்டினது
பேசினது எல்லாமே அந்த வீடியோ கேமரால்
பதிவாகியிருக்கும். நாங்க நினைச்சா பதிவ
அந்த கேசட்டை இப்பவே எல்லா ஸாட்டை
சேனல்களுக்கும் அனுப்பி ஒளிபரப்பி உங்க
வெளிச்சத்துக்குக் கொண்டுட்டு வரமுடியு
நீங்க எங்களுக்குத் தொந்தரவு கொடுக்காதவ
இந்தக் கேசட்டும் பத்திரிகை ஆபீஸை விட்
வெளியே போகாது.''

''என்ன...? ப்ளாக் மெயிலா...?''

''நோ... நோ...! இது ஒயிட் மெயில். எங்க
மாதிரியான பத்திரிகைக்காரர்களுக்கு 'ப்ள
என்கிற வார்த்தையே பிடிக்காது...''

டேனியல் மாணிக்கம் இரண்டு பேர்களை
ஒரு தீப்பார்வை பார்த்துவிட்டு கோபம
வெளியேறினார்.

அருணா சில விநாடிகள் மௌனம
இருந்துவிட்டு ஆடலரசை ஏறிட்டாள்.

''ஸார்...! டேனியேல் மாணிக்கம் இ
நிமிஷம் அடிபட்ட புலி. எப்படியும் நம்ம பே
பாயாமே இருக்கமாட்டார்.''

ஆடலரசு சிரித்தார். ''பற்களும் நகங்க
இல்லாத புலி டேனியல் மாணிக்கம். மேலதிக
களின் கட்டளைக்குப் பணிந்து வாங்கு
சம்பளத்துக்கு விசுவாசமாக உறுமிவிட்
போயிருக்கார்...''

''நோ... ஸார்...! இந்த விஷயத்தை ந
அலட்சியப்படுத்தாமே கொஞ்சம் சீரிய



ண்டில் பண்ணனும் ஸார். அப்பத்தான் போலீஸ்
ல் சைலண்ட்டா இருப்பாங்க...''

''என்ன பண்ணலாம்... சொல்லு...!''

''டேனியல் மாணிக்கம் நம்ம பத்திரிகை
ஸுக்கு வந்து மிரட்டிட்டு போனதை ஒரு
ஸ்டோரியா போடணும்...''

''போட்டுட்டா போகுது...!'' சொன்ன ஆடலரசு
டர்காமில் உதவியாசிரியர் கமலப்பித்தனைக்
பிட்டார். அவர் ஓடோடி வந்தார்.

''கமலப்பித்தன்..''

''ஸார்...''

''அட்டைப்படம் ப்ரஸ்ஸுக்கு போயாச்சா...?''

''இல்ல... ஸார்... இனிமேதான்...''

''நல்லவேளை...! இந்த வாரம் அட்டைப்
த்தை மாத்தணும். ஆர்ட்டி ஸ்ட்டுக்கு போன்
ணி வரச்சொல்லு...''

உதவியாசிரியர் கமலப்பித்தன் தலையாட்டி
டு வெளியே வந்தார். தன் மேஜைக்கு வந்து
ட்டிஸ்ட்டுக்கு போன் செய்து விபரம் சொல்லி
டு அலுவலகத்தின் கோடியில் இருந்த
லெட்டை நோக்கிப் போனார்.

யாரும் இல்லாத அந்த ஒதுக்குப்புறமான
த்தில் இருந்த டாய்லட்டுக்குள் நுழைந்து
வைச் சாத்திக் கொண்ட கமலப்பித்தன், தன்
கெட்டில் இருந்த செல்போனை எடுத்து
ர்ப்பித்து சில எண்களை அழுத்தி இணைப்புக்
டைத்ததும் பேச ஆரம்பித்தார்.

''நான் கமலப்பித்தன்... ஸார்''

''சொல்லு...''

''நாம நினைச்ச மாதிரியே போலீஸிலிரு அஸிஸ்டண்ட் கமிஷனர் டேனியேல் மாணி 'கவசம்' பத்திரிகை ஆபீஸுக்கு வந்து மிரட்டி போயிருக்கார்...''

''அப்படின்னா இனிமே 'கவசம்' பத்திரி ஆபீஸுக்கு என்ன விபரீதம் நேர்ந்தாலும் போலீஸ் மேலத்தான் போய் விடியும்...''

''ஆமா ஸார்...''

''சரி... இன்னிக்கே காரியத்த பண்ணிடலாமா...?''

''பண்ணிடலாம் ஸார்.... எதையுமே சூட்டே சூடா பண்ணினாத்தான் எஃபெக்ட் இருக்கும் ஸ

''சரி... காரியத்தை முடி...'' மறுமு கட்டளையிட்டு விட்டு தொடர்பை அறுத் கொள்ள, கமலப்பித்தன் செல்போனை அணை பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டு லெட்டினின்றும் வெளியே வந்தார்.

கண்ணாடித் தடுப்புகளால் மறைக்கப்பட்டி சின்னச் சின்ன அறைகளுக்குள் பத்திரி ஊழியர்கள் தத்தம் பணிகளில் ஆழ்ந்திரு கமலப்பித்தன் இயல்பாக நடந்து தன்னுடை அறைக்கு வந்தார்.

கதவைச் சாத்திக் கொண்டு – பீரோவு பின்புறமாய் இருந்த தன்னுடைய லஞ்ச் டி கேரியரை எடுத்தார். கேரியரின் லாக்கை கவன கழற்றியவர் மேலே இருந்த முதல் அடு டிபனைப் பிரித்தார்.

உள்ளே அடைசலாய் தயிர் சாதம் மணத்த அதை எடுத்து ஓரமாய் வைத்துவிட் இரண்டாவது அடுக்கை எடுத்துப் பிரித்தார்

உள்ளே –



பாலித்தீன் பேப்பரால் சுற்றப்பட்ட அந்த டை வடிவ டைனமைட் பார்வைக்குக் டைத்தது. கூடவே அந்த டைனமைட்டுக்கு வச இணைப்பு மாதிரி தீப்பெட்டி சைஸில் மாட் கன்ட்ரோலும் பக்கத்திலேயே தெரிந்தது.

## 2



மத்திய சிறைச்சாலை.

காலை மணி பத்தரை.

ஃபைல்களைப் பார்த்து கையெழுத்து போட்டுக் காண்டிருந்த ஜெயில் சூப்பரின்டெண்டெண்ட் ன்பமணி அறை வாசலில் நிழலாடியதை ணர்ந்து நிமிர்ந்தார்.

ஜெயிலர் உபயதுல்லாவும் வார்டன் ண்முகராஜனும் நின்றிருந்தார்கள்.

இன்பமணி புன்னகைத்தார்.

''ரெண்டு பேரும் வாங்கய்யா உள்ளே.''

வந்தார்கள்.

இன்பமணி ஃபைலை மூடி வைத்துவிட்டு கட்டார்.

''இன்னிக்கும் கல் க்வாரிதானே...?''

''ஆமா ஸார்...''

''மொத்தம் எத்தனை கைதிகளைக் கூட்டிட்டு பாறீங்க...?''

''அம்பத்தியொரு பேர் ஸார்...''

''ரைஃபிள் லோட் பண்ணியாச்சா...?''

''பண்ணியாச்சு ஸார்...''

“உபயதுல்லா...! வெளியே யா
நிக்கறாங்களான்னு பாரு...”

உபயதல்லா போய்ப் பார்த்துவிட்டு வ

“யாரும் இல்ல ஸார்...”

“ரெண்டு பேரும் இப்படி பக்கத்துல வ

நெருங்கி வந்தார்கள். ஜெயில் சூப் டெண்டெண்ட் இன்பமணி குரலைத் தா கொண்டார்.

“மத்தியானம் சரியா ஒரு மணிக்கு கல்க்வாரிக்கு வரும். சரக்கை வாங்கும் சரி, அதைக் கொண்டு வரும்போது ஜாக்கிரதையா இருக்கணும்...”

“சரக்கு எத்தனை கிலோ ஸார்.”

“ரெண்டு கிலோ...! கைதிகள்ல எவ பார்த்துட போறான்...”

சண்முகராஜன் சிரித்தான். “அந்த க்வாரியை யார் ஸார் பார்க்கப் போறாங்க யானையையே கடத்திகிட்டு வரலாம்.”

மேஜையின் மேலிருந்த டெலி கினுகினுத்து கூப்பிட்டது. இன்பமணி ரிஸ எடுத்தார்.

“ஹலோ...”

“இன்பமணியா...?”

மறுமுனையில் ஒலித்த குரலைக் கேட் பவ்யமானார் இன்பமணி.

“சொல்லுங்க அய்யா”

“அங்கே என்ன பண்ணிட்டிருக்கே...?”

“ஃபைல்ஸ் எல்லாம் பார்த்து கொ கையெழுத்து போட வேண்டியிருக்கய்யா.”



“ஒரு பத்து நிமிஷம் என்னோட செல்லுக்கு ந்துட்டு போ...”

“இதோ... புறப்பட்டு வந்துட்டிருக்கேன்யா” ஸீவரை சத்தம் இல்லாமல் வைத்துவிட்டு இன்பமணி நிமிர்ந்தார். உபயதுல்லாவையும் ண்முகராஜனையும் ஏறிட்டபடி சொன்னார்.

“அய்யா... என்னைக் கூப்பிடறார். நான் டனே போகணும். நீங்க கிளம்புங்க. சாயந்தரம் ாலு மணிக்கு பார்க்கலாம். ரெண்டு கிலோ த்திரம். யார்க்கும் எந்த சந்தேகமும் வந்துடக் டாது.”

“சரக்கைப் பத்தி நீங்க கவலைப்படாதீங்க ார். எத்தினி வாட்டி கொண்டு வந்து சேர்த்திருக்கோம்...” சொல்லிக் கொண்டே பயதுல்லாவும், சண்முகராஜனும் சல்யூட் அடித்து பின்வாங்கிப் போக, இன்பமணி நாற்காலியைத் தள்ளிக் கொண்டு எழுந்தார். தலைக்குத் தொப்பியைப் பொருத்திக் கொண்டு வராந்தாவில் வகநடை போட்டார்.

மிக நீளமான வராந்தாவில் ஐந்து நிமிஷ டை போட்டதும் முதல் வகுப்பு சிறைப் பிரிவு ந்தது.

இன்பமணியைப் பார்த்ததும் அங்கேயிருந்த கன்விக்டர் சல்யூட் அடிக்க அதைப் பொருட் படுத்தாமல் நடந்த இன்பமணி மேலும் அரை நிமிஷ நேரம் நடந்து அந்தச் சிறைக் கம்பிகளுக்கு முன்பாக போய் நின்று பவ்யமாய் குரல் கொடுத்தார்.

“அய்யா...”

கட்டிலில் செல்போனுடன் படுத்திருந்த அந்த ஐம்பது வயது நபர் மெல்லப் புரண்டு எழுந்து உட்கார்ந்தார். முரட்டு வெள்ளை வேஷ்டி. கை வைத்த பனியன் – பளீரென்று வழுக்கைத்தலை.

காதோரங்களில் மட்டும் கற்றையாய் வெ
ரோமம். மூக்கின் நுனியில் கண்
தொற்றியிருந்தது.

கையசைத்தார்.

''வா... உள்ளே...!''

இன்பமணி பள்ளி மாணவனைப்
பவ்யமாய் உள்ளே நுழைந்து அந்த மனித
பக்கத்தில் போய் நின்றார்.

''அய்யா...!''

அவர் மெல்லச் சிரித்தார்.

''என்ன இன்பமணி...! ரெண்டு
என்னோட ரூம் பக்கமே வரலை...''

''அய்யா... அது வந்து... ரெண்டு
ஒரு அரசியல் போராட்டத்தில் கை
வந்தவங்களை கவனிக்க வேண்டியதாயிடு

''இன்னிக்கு சரக்கு வர்ற நாள். ஞா
இருக்கா...?''

''அதை மறக்க முடியுங்களாய்
உபயதுல்லாவையும் சண்முகராஜனையும்
க்வாரிக்கு அனுப்பிட்டுத்தான் வர்றேன்...''

''ரெண்டு கிலோ.''

''சொல்லியிருக்கேன்யா...''

''மாட்டிக்கமாட்டாங்களே?''

''அவங்க என்னிக்கு மாட்டியிருக்
கய்யா...?''

இன்பமணி சொல்லிக் கொண்டிருக்கும்போ
அந்த நபரின் பாக்கெட்டில் இருந்த செல்போ
மெல்லச் சிணுங்கி கூப்பிட்டது.



அவர் எடுத்தார். குரல் கொடுத்தார்.

''யாரு...?''

ஒரு பெண் குரல் பதிலுக்கு கேட்டது.

''நீங்க மாஜி மந்திரி ராஜாங்கம்தானே?''

''நீ யாரம்மா...?''

''என் பேர் அருணா. 'கவசம்' பத்திரிகையில் தலைமை நிருபர்.''

''சரி! உனக்கு என்ன வேணும்?''

''நீங்க எக்ஸ் மினிஸ்டர் இராஜாங்கம் தானேன்னு நான் கேட்ட கேள்விக்கு நீங்க இன்னமும் பதில் சொல்லலை.''

''ஆமா... நான் எக்ஸ் மினிஸ்டர் ராஜாங்கம்தான் பேசறேன்.''

''எங்க 'கவசம்' பத்திரிகை சார்பாக உங்களை ஒரு பேட்டி எடுக்கணும். ஒரு மணி நேரம் எனக்கு அப்பாயிண்ட்மெண்ட் கொடுக்க முடியுமா...?''

இராஜாங்கம் சிரித்தார்.

''என்கிட்டே பேட்டி எடுக்க என்னம்மா இருக்கு...? அஞ்சு வருஷத்துக்கு முந்தி நான் தமிழ்நாட்ல நிதிமந்திரியா இருந்தேன். தமிழ்நாட்டுக்கு பட்ஜெட்போடறபோது என்னோட பரம்பரைக்கும் சேர்த்து சின்னதா ஒரு பட்ஜெட் போட்டுகிட்டேன். பண்ணின தப்பை மத்த மந்திரிங்க மாதிரி ஒழுங்கா பண்ணாமே, தப்புத்தப்பா பண்ணினதால இன்னிக்கு ரெண்டு வருஷம் உள்ளே போட்டுட்டாங்க.''

''ஸார்... நீங்க சிறைக்குள்ளே இருந்தாலும் ஒரு சிங்கம் மாதிரி இருக்கிறதா கேள்விப்பட்டேன்.

கையில் செல்போன், ஏர்கூலர், மட்டன் பிரியாணி, சில்லி சிக்கன், பி.டபிள்யூ ஸ்காட்ச், வாரத்துக்கு ஒரு மாது, ஜெயிலுக்குள்ளேயே பணக்கார வீட்டு கைதிகளுக்கு போதை மருந்து விற்பனை... இப்படி உங்க ஆட்சி அமோகமா இருக்காமே...!''

இராஜாங்கம் முகம் மாறினார்.

''என்னோட செல்போன் நம்பர் உனக்கு எப்படி கிடைச்சுது...?''

''பேட்டி எடுக்க ஒரு அப்பாயின்ட்மெண்ட் கொடுங்க... நேர்ல பார்க்கும்போது சொல்றேன்.''

''நான் உனக்கு பேட்டிக்காக அப்பாய்ன்மெண்ட் கொடுத்தாலும் ஜெயில் நிர்வாகம் ஒத்துக் கனுமே?''

''என்ன மாஜி மினிஸ்டர் ஸார்...! அந்த ஜெயிலுக்குள்ளே நீங்க வெச்சதுதான் சட்டம்ன்னு எனக்குத் தெரியாதா..? சிறை ஐ.ஜி.ஈஸ்வர், ஜெயில் சூப்பரின்டெண்டெண்ட் இன்பமணி, ஜெயிலர் உபயதுல்லா, வார்டன் சண்முகராஜன் இந்த நாலு பேரும் உங்க கண் அசைவுக்காக கைகட்டி, வாய் பொத்தி காத்து இருக்கிறது வெளியே இருக்கிற பொது மக்களுக்கு தெரியாமே இருக்கலாம். ஆனா எனக்குத் தெரியும்.''

இராஜாங்கம் முகம் இறுகிப்போய் செல் போனில் மௌனம் சாதிக்க, அருணா சிரித்தாள்.

''என்ன எக்ஸ் மினிஸ்டர் ஸார்...! நான் பேசற உண்மைகள் ரொம்பவும் கசக்குதோ...?''

இராஜாங்கத்தின் குரல் இப்போது கரகரத்து போயிருந்தது.

''உம் பேர் என்னம்மா சொன்னே?''

''அருணா...! பாரத புத்திரி என்கிற பெயர்ல அரசியல் கட்டுரைகளையும் எழுதிகிட்டு வர்றேன்.''



''ஓ...! அந்த பாரத புத்திரி நீதானா...! உன்னோட அனல் வீசும் கட்டுரைகளை நிறையவே படிச்சிருக்கேன். போன தடவை ஆட்சி மாறினதுக்கு காரணமே உன்னோட கட்டுரைகள்தான்னு பரவலா ஒரு பேச்சுக்கூட இருக்கு.''

''தேங்க்யூ மாஜி ஸார்...! உங்களை பேட்டி எடுக்க எப்ப வரலாம்...?''

''நாளைக்கு மத்தியானம் மூணு மணி யிலிருந்து நாலு மணிக்குள்ளே வாம்மா...''

செல்போனை அணைத்தார் இராஜாங்கம். முகம் இப்போது கறுத்துப் போய் வியர்வையில் இருந்தது.

''இன்பமணி...''

''அய்யா...''

''நம்ம விஷயங்கள் இந்த உயரமான ஜெயில் மதில் சுவரைத்தாண்டி வெளியே போயிருக்கு. அருணா என்கிற பெண் பத்திரிகை நிருபர்க்கு எல்லா விஷயங்களும் தெரிஞ்சிருக்கு. என் செல்போனுக்கு போன் பண்ணி பேட்டி எடுக்க அப்பாயிண்ட்மெண்ட் கேக்கிறா... நாளைக்கு மத்தியானம் மூணு மணியிலிருந்து நாலு மணிக்குள்ளே இங்கே அவளை வரச் சொல்லி யிருக்கேன். அவ இங்கே கண்டிப்பா வருவா... ஆனா...''

இன்பமணி குறுக்கிட்டார்.

''புரியுதுங்கய்யா...! அந்த அருணா இங்கிருந்து உயிரோடு திரும்பிப் போகக் கூடாது...''

''அதேதான்...!''

# 3



கமலப்பித்தன் வெடிகுண்டைக் கர்ப்பம் தாங்கியிருந்த டிஃபன் பாக்ஸை எடுத்துக் கொண்டு ப்ரிண்டிங் செக்ஷனுக்குள் நுழைந்தார்.

டீ சாப்பிடும் இடைவேளையாதலால் ஊழியர்கள் எல்லோரும் வெளியே போயிருக்க ப்ரிண்டிங் செக்ஷன் வெறிச்சோடிப் போயிருந்தது.

கமலப்பித்தன் சுற்றும் முற்றும் ஜாக்ரதை பார்வை பார்த்துக் கொண்டே செக்ஷனின் கோடியில் இருந்த ரிட்டர்ன் காப்பிகள் அடுக்கி வைத்திருந்த அறைக்குள் நுழைந்து அம்பாரமாய் குவித்து வைக்கப்பட்டிருந்த புத்தகங்களுக்கு நடுவில் நடந்து அறையின் மூலைக்குப் போனார்.

டிஃபன் பாக்ஸைத் திறந்து பாலித்தீன் பேப்பரில் சுற்றப்பட்டிருந்த டைனமைட் சங்கதியை எடுத்து மறைத்து வைத்துவிட்டு ரிமோட் கண்ட்ரோலை பேண்ட் பாக்கெட்டில் பத்திரப்படுத்திக் கொண்டு வெளியே வந்தார்.

பார்வைக்கு யாரும் கிடைக்கவில்லை. வேகவேகமாய் நடந்து ப்ரிண்டிங் செக்ஷனைக் கடந்து தன்னுடைய அறைக்குள் நுழையும்முன் வியர்த்து விறுவிறுத்துப் போனார்.

இனி எந்த விநாடி ரிமோட் கண்ட்ரோலின் பட்டனை அழுத்தினாலும் 'கவசம்' பத்திரிகையின் ஒட்டு மொத்த அலுவலகமும் செங்கல் குவியல் களாக விழுந்து கிடக்கும்.

வியர்த்த முகத்தைக் கர்ச்சீஃபால் ஒற்றிக் கொண்டிருந்தபோது — இண்டர்க்காம் டெலிபோன் சிவப்புப் புள்ளியை எரிய விட்டபடி கூப்பிட்டது.



ஆசிரியர் ஆடலரசு பேசினார்.

''கமலப்பித்தன்...''

''ஸார்...''

''ஆர்ட்டிஸ்ட்டுக்கு போன் பண்ணினியா?''

''பண்ணிட்டேன் ஸார். ஒரு மணி நேரத்துக்குள்ளே வந்துடறதா சொன்னார்...''

''நீ... இப்ப ஃப்ரீயா இருக்கியா...?''

''லே—அவுட் பார்த்துட்டிருக்கேன் ஸார்.''

''அதை மத்தியானம் பார்த்துக்கலாம் இல்லையா?''

''பார்த்துக்கலாம் ஸார்...''

''நீ உடனே எழுத்தாளர் ஞானக்கிறுக்கன் வீட்டுக்குப் போய் ஒரு மினி பேட்டி எடுத்துட்டு வந்துடு. மனுஷன் 'சாகித்ய அகாடமி அவார்டு' வாங்கியிருக்கார். பேட்டி எடுக்க வரலையான்னு கேட்டு நாலைஞ்சு தடவை போன் பண்ணிட்டார்.''

''ஸார்...'' கமலப்பித்தன் குரலை இழுத்தார்.

''என்ன...?''

''எழுத்தாளர் ஞானக்கிறுக்கனைப் பேட்டி எடுக்க அருணா போகப் போறதா என்கிட்டே சொன்னாங்களே?''

''அருணா இன்னும் கொஞ்ச நேரத்துல வேற ஒரு முக்கியமான நபரை பேட்டி எடுக்கிறதுக்காக போகப் போறா... நீ இந்த ஞானக்கிறுக்கனைப் போய்ப் பார்த்துட்டு வந்துடு...''

''சரி ஸார்...''

''சும்மா 'வளவள'ன்னு பேசிட்டிருக்க வேண்டாம். அரைமணி நேரத்துக்குள்ளே பேட்டியை முடிச்சுக்கிட்டு வந்துட்டே இரு...''

“சரி ஸார்...” இண்டர்காமை அணைத்த கமலப்பித்தன் தன் ஜோல்னா பையையும் கேமராவையும் தோளில் எடுத்து மாட்டிக் கொண்டார்.

மனசுக்குள் சந்தோஷம் வழிந்தது.

‘டீ குடிக்கப் போகும் சாக்கில் வெளியே போய் ரிமோட் கண்ட்ரோலைத் தட்ட நினைத்த எனக்கு இப்போது கிடைத்திருக்கிற ஒரு வாய்ப்பு ஒரு பெரிய வரப்பிரசாதம். யார்க்கும் என்மேல சந்தேகம் வராது.’

கமல்ப்பித்தன் மேஜை ட்ராயரைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தார்.

அருணா எதிர்பட்டாள். சிரித்தாள்.

“கமலப்பித்தன் ஸார்...! அந்த ஞானக் கிறுக்கனைப் பார்த்து ஹேண்டில் பண்ணுங்க. ஏதோ ‘பாரத ரத்னா’ அவார்ட் வாங்கிட்ட மாதிரி ஒரே அலட்டல். அந்த அலட்டலை தவிடு பொடி பண்ற மாதிரி ‘நறு’க்னு நாலைஞ்சு கேள்விகளையாவது கேளுங்க...”

“பின்னே விடுவேனா...? நீங்க யாரை பேட்டி எடுக்கப் போறீங்க அருணா...?”

அருணா கண்ணைச் சிமிட்டினாள். “ஸாரி கமலப்பித்தன் ஸார். இப்போதைக்கு எனக்கு மட்டுமே அது தெரிந்த விஷயமாக இருக்கட்டும்...”

அருணா கிளம்பிப் போய்விட கமலப்பித்தன் அவளையே முறைத்தார்.

‘உன் தலையில் இருக்கிற கிரீடம் எல்லாம் இன்னும் பத்து நிமிடத்துக்குள்ளே காணாமே போயிடும். ‘கவசம்’ பத்திரிகைக்கு இன்னிக்கு



இறப்பு விழா. மண்ணோடு மண்ணாய் புதையுண்டு போகப் போகிற புனித விழா. ஹார்ட் பேஷண்ட்டான ஆடலரசுக்கும் இன்னிக்குத்தான் தன் வாழ்க்கையோட கடைசி தினம்...’

கமலப்பித்தன் கறுவிக் கொண்டே வெளியே வந்தார். பதினோரு மணி வெய்யில் முகத்தையும் பிடரியையும்தாக்கி தீயாய் சுட்டது.

பிளாட்பாரத்தில் நூறு மீட்டர் தூரம் நடந்தவர் ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு சந்துக்குள் நுழைந்து செல்போனை எடுத்தார்.

எண்களைத் தட்டிவிட்டு பேச ஆரம்பித்தார். “ஸார்... நான் வெளியே வந்துட்டேன். எழுத்தாளர் ஞானக்கிறுக்கனை பேட்டி எடுக்கச் சொல்லி ஆசிரியர் என்னை வெளியே அனுப்பியது நம்ம காரியத்தை செயல்படுத்த இப்ப வசதியாயிடுச்சு...”

“டைனமைட்டை பத்திரிகை அலுவலகத்தின் ரிட்டர்ன் காப்பி அறைக்குள்ளேதானே வெச்சிருக்கே?”

“ஆமா... ஸார்...”

“யாரும் பார்க்கலையே...?”

“பார்க்க முடியாது ஸார்...”

“சரி... நீ இப்போ எங்கே நின்னு பேசிக்கிட்டு இருக்கே...?”

“கவசம் பத்திரிகை ஆபீஸிலிருந்து நூறு மீட்டர் தூரம் தள்ளியிருக்கிற பட்டாளத்து நாயுடு சந்திலிருந்து பேசிட்டிருக்கேன்.”

“அங்கேயிருந்து ரிமோட் கண்ட்ரோல் பட்டனை அழுத்தினா டைனமைட் ரியாக்ட் ஆகுறது கொஞ்சம் கஷ்டம். இன்னும் கொஞ்சம் பக்கத்துல போயிடு... பத்திரிகை அலுவலகத்துக்கு

எதிர்ப்பக்கம் போய்ட்டா ரிமோட் கண்ட்ரோலுக்கு ரேஞ்ச் கிடைக்கும்...''

''சரி ஸார்... நீங்க சொன்ன மாதிரியே ரோட்டுக்கு எதிர்பக்கம் போய் ரிமோட் கண்ட்ரோல் பட்டனைத் தட்டிடறேன்...''

''செய்...''

கமலப்பித்தன் செல்போனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டு அந்த சந்தை விட்டு வெளியே வந்தார்.

ரோட்டைக் கடக்க ஆரம்பித்தார்.

பாதி ரோட்டைக் கடந்திருந்தபோது வேகமாய் வந்து கொண்டிருந்த போக்குவரத்துக் கழக பஸ்ஸைப் பார்த்து மிரண்டுபோன கமலப்பித்தன் பின்னோக்கி வர முயல புயலாய் சீறிக்கொண்டு வந்த பைக் கமலப்பித்தனை மொத்தி இருபதடி தூரத்துக்கு தூக்கி வீசியது.

அவர் பாக்கெட்டில் இருந்த செல்போனும் ரிமோட் கண்ட்ரோலும் பிளாட்பாரத்தின் ஒரு ஓரமாய் உட்கார்ந்து, செருப்பு தைத்துக் கொண்டிருந்த தொழிலாளிக்குப் பக்கத்தில் போய் விழுந்தது.

## 4



மண்டையைப் பிளக்கும் வெய்யிலில் கைதிகள் கல் உடைக்கும் பணியில் ஈடுபட்டிருக்க, ஜெயிலர் உபயதுல்லாவும் வார்டன் சண்முகராஜனும் ஒரு மரத்துக்குக் கீழே வாயில் கசியும் சிகரெட் புகையோடு நின்றிருந்தார்கள்.

''உபை'' சண்முகராஜன் கூப்பிட்டார்.

''என்ன சண்முகம்...?''



''ஒரு ரெண்டு நாள் லீவு போட்டுட்டு பாண்டிச்சேரி போய்ட்டு வரலாமா...?''

''எதுக்கு...?''

''முத்தியால்பேட்டையில் நம்ம ஃப்ரண்ட் ஒருத்தன் பலான பிசினஸ் பண்ணிட்டிருக்கான். எல்லாம் ஹை க்ளாஸ் பார்ட்டி. முக்கியமா காலேஜ் பொண்ணுங்க. இருபத்தஞ்சு வயசுக்கு மேலே அங்கே பொண்ணுகளே கிடையாதுன்னா பார்த்துக்கோயேன்...''

''அப்படியா...?''

''ரெண்டு எம்.எல்.ஏ.க்களோட பரிபூர்ண ஆசிர்வாதம் இருக்கிறதால போலீஸ் எட்டிக்கூட பார்க்கறதில்லையாம்...''

''எப்ப போலாம் சொல்லு...''

''அடுத்த வாரம் வெச்சுக்கலாமா?''

''லீவு கிடைக்குமா...?''

''கேட்டுப் பார்க்கலாம். வெள்ளிக்கிழமை ஒரு நாள் லீவு போட்டா சனி, ஞாயிறும் இருந்துட்டு வந்துடலாம்...''

இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போதே நான்கைந்து ஆடுகள் ஓடி வந்தன. பின்னால் ஒரு ஆட்டு இடையன், தோளில் துணிப் பை. இடையில் ஒரு கோவணத்தோடு பின்னால் ஓடி வந்தான். உபயதுல்லா கத்தினார். ''டேய்... இந்தப்பக்கம் ஏண்டா வந்தே... அந்தப் பக்கமா ஆடுகளை ஓட்டிக்கிட்டுப்போடா... கைதிங்க இருக்கிறது உனக்குத் தெரியலையாடா நாயே... போடா.. அந்தப் பக்கம்.''

இடையன் சிரித்தான். பின் குரலைத் தாழ்த்தி பேசினான். ''ஏன் ஸார் எம்மேல கோப்படறீங்க...

நீங்க நினைக்கிற மாதிரி நான் இடையன் கிடையாது.''

''பின்னே...?''

''பார்ட்டி ஸார்.... ரெண்டு கிலோ கொண்டு வந்திருக்கேன்.''

உபயதுல்லாவும் சண்முகராஜனும் திடுக்கிட்டுப்போய் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அவனை நெருங்கினார்கள்.

''நீ இப்படியொரு கெட்டப்பில் வருவேன்னு நாங்க கொஞ்சம் கூட நினைச்சுப் பார்க்கலை. எடு சரக்கை...''

அவன் தோளில் தொங்கிக் கொண்டிருந்த துணி மூட்டையை எடுத்து அவர்களிடம் கொடுத்துவிட்டு கேட்டான்.

''இராஜாங்கம் அய்யா ஏதாவது தகவல் சொல்லிவிட்டாரா ஸார்...?''

''இல்லை...''

''சரி... இந்த லெட்டரை அய்யாகிட்டே குடுத்துடுங்க... அடுத்த வாரம் இதே நேரம் மறுபடியும் சரக்கோடு வந்து உங்களைப் பார்க்கிறேன்.''

உபயதுல்லாவும் சண்முகராஜனும் பிரமிப்போடு பார்த்துக் கொண்டிருக்கும்போதே – அவன் ஆடுகளை ஓட்டிக் கொண்டு மரங்களுக்குப் பின்னால் மறைந்து போனான்.

துணிமூட்டையை அவிழ்த்தார் உபயதுல்லா.

உள்ளே இரண்டு பாலித்தீன் பைகளில் ஹெராயின் போதை மருந்து ஏதோ உப்புத்தூள் போல் பார்வைக்குக் கிடைத்தது.



''உபை...''

''ம்...''

''இது என்ன விலையிருக்கும்...?''

''எப்படியும் ஐம்பது லட்சம் தேறும்... இராஜாங்கம் மந்திரியா இருந்தபோதும் இதே பிசினஸ்தான் பண்ணினார். இப்போ ஜெயில்ல இருக்கும்போதும் இதே பிசினஸ்தான் பண்றார். யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்'ன்னு சொல்லுவாங்க. அதே மாதிரி இராஜாங்கம் உள்ளே இருந்தாலும் இராஜாதான். வெளியே இருந்தாலும் இராஜாதான்.''

உபயதுல்லா சொல்லிக் கொண்டிருக்கும்போதே அந்த சத்தம் கேட்டது.

சண்முகராஜன் நிமிர்ந்தார்.

''உபை! ஏதோ சத்தம் கேட்கலை...?''

''ம்.. கேட்டது. ஏதோ 'க்ளிக்'ன்னு சத்தம்...''

''யாராவது போட்டோ எடுத்திருப்பாங்களா...?''

''வா... பார்க்கலாம்... சத்தம் அந்த புதர்க்குப் பின்னாடி இருந்துதான் வந்தது''

இருவரும் புதர் பக்கமாய் நகர்ந்த விநாடி?

மஞ்சள் சுடிதார் அணிந்த பெண் ஒருத்தி புதர்க்குப் பின்னாடியிருந்து குபீரென்று எழுந்து ஓடினாள்.

''உபை...! அவளை மடக்கு...''

உபயதுல்லா புதரை ஒரே பாய்ச்சலாய்த் தாண்டி ஓடிக் கொண்டிருந்த பெண்ணின் தலையில் தன் கையில் வைத்திருந்த கனமான லாட்டியால் ஒரு போடு போட்டார்.

அந்த மூர்க்கமான அடி மூளையை சிதம்பி வைக்க – அந்தப் பெண் அப்படியே ஒருக்களித் சரிந்தாள்.

பின்னந் தலையில் ரத்தம் ஊற்று போ கிளம்பிக் கொண்டிருக்க உபயதுல்லா சண்முகராஜனும் சுற்றும் முற்றும் பார்த்தார்க

கொஞ்சம் தூரத்தில் கைதிகள் மலை வாரத்தில் கல் உடைக்கும் வேலையை சிரத்தைய செய்து கொண்டிருக்க கண்ணுக்கெட்டிய தூ வரைக்கும் வேறு யாரும் பார்வைக்குக் கிடைக் வில்லை.

''சண்முகம்...! யாரிவ...?''

''தெரியலையே...! அவ தோள்ல மாட் யிருக்கிற வேனிடி பேக்கைத் திறந்து பாரு...''

உபயதுல்லா வேனிடி பேக்கை எடுத்து திறந் பார்க்க – அந்த அடையாள அட்டை கிடைத்தது புகைப்படத்தோடு ப்ரிண்ட்டட் எழுத்துக்க தெரிந்தன.

பெயர் : அருணா (மற்றும்) பாரத புத்திர
பணி : பத்திரிகையாளர்
பத்திரிகை : கவசம்.
முகவரி : நம்பர் 72, போஸ் காலனி,
சாலிக்கிராமம், சென்னை – 93

## 5



ஹாஸ்பிடல்.

ஐ.ஸி.யூனிட்டிலிருந்து வெளிப்பட்ட டாக்ட மனோகரனை ஆடலரசு தவிப்பாய் எதிர் கொண்டா



''டா... டாக்டர்...'' கண்களில் நீர்.

''ஸாரி...! இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது... தலையில் பலத்த அடி... மே... பி [illegible]...! ரெண்டு ஆப்ரேஷன் பண்ண வேண்டியிருக்கும்.''

''பண்ணுங்க... டாக்டர்...! பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை! கமலப்பித்தன் உயிர் பிழைச்சா அதுவே எனக்குப் போதும்... பத்திரிகைத் துறையில் நிறைய சாதனைகளை பண்ணணும்னு அதுக்காகவே கல்யாணம் பண்ணிக்காமே இருந்தவன் ஸார்...''

''பார்க்கலாம்...! எங்களால முடிஞ்ச எல்லா முயற்சிகளையும் பண்ணிகிட்டு இருக்கோம். தலையில் மட்டும் அடிபடாமே இருந்தா இந்நேரம் அவர் எந்திரிச்சு உட்கார்ந்து பேசிகிட்டு இருப்பார்.''

டாக்டர் சொல்லிவிட்டு மறுபடியும் ஐ.ஸி. யூனிட்டுக்குள் போய்விட, ஆடலரசு பக்கத் திலிருந்த பி.வி.ஸி. நாற்காலிக்குப் போய்ச் சாய்ந்தார்.

நெற்றிப்பொட்டை இடது கையின் ஆட்காட்டி விரலால் பற்றிக் கொண்டு கண் மூடி இருந்தவரை கனமான பூட்ஸ் நடை கலைத்தது.

கண்களை மலர்த்தினார்.

இன்ஸ்பெக்டர் ஒருவர் நின்றிருந்தார். சட்டையில் குத்தியிருந்த நேம் பேட்ஜ் வசந்தகுமார் என்று சொன்னது.

''எஸ்'' என்றபடி எழுந்தார் ஆடலரசு. ''விபத்துக்கு காரணமானவங்களை அரஸ்ட் பண்ணிட்டீங்களா இன்ஸ்பெக்டர்...?''

...?''

''இந்த கல் க்வாரியில் எத்தனை கல்லுக் குழிகள் இருக்கு. ஒவ்வொரு கல்லுக்குழியும் பதினைந்தடி ஆழம். குழியோட விட்டம் இரண்டடி. பாடியை செங்குத்தாய் இறக்கிட்டு மண்ணையும் கல்லையும் தள்ளி மூடிட வேண்டியதுதான். அருணா ஒரு கல்லுக் குழிக்குள்ளே இருக்கிற விஷயம் என்னிக்கும் வெளியே வரப்போறது இல்லை...''

''இந்தக் கல்லுக்குழி ஞாபகமே எனக்கு வரலை...

அருணாவோட மூச்சை நிறுத்திடலாமா...?''

''ம்...''

இருவரும் செயல்பட்டார்கள். சண்முகராஜன் மயங்கிக் கிடந்த அருணாவின் கழுத்தை இரண்டு கைகளாலும் பிடித்து மூர்க்கமாய் நசுக்க உடம்பு உயிர் போகும் அவஸ்தையில் துடிக்க உபய துல்லாவின் கைகள் அருணாவின் கால்களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது.

சரியாய் இருபதே விநாடிகள்!

அருணாவின் தலை தொய்ந்தது. பாதி திறந்து கிடந்த விழிகளில் உயிர் பறந்தது.

இரண்டு பேர் முகங்களிலும் வெள்ளமாய் வியர்வை.

''உபை...!''

''ம்...''

''காரியம் முடிஞ்சுது... இனி பாடியை உடனே டிஸ்போஸ் பண்ணனும்.''

''நான் போய் பக்கத்திலேயே கல்லுக்குழி ஏதாவது இருக்கான்னு பார்த்துட்டு வர்றேன்.''



உபயதுல்லா எழுந்து புதிராய் மண்டிக்கிடந்த கற்றாழைச் செடிகளுக்கு நடுவில் நடந்து போய் ஐந்து நிமிஷங்களுக்குள் திரும்பவும் வந்தார்.

''சண்முகம்...! பக்கத்திலேயே ஒரு கல்லுக்குழி இருக்கு. பாடியை அதுல இறக்கிட்டா ஒருத்தர்க்கும் தெரியப் போறது இல்லை.''

''சரி... தூக்கு...''

இரண்டு பேரும் அருணாவின் உடலை தலை மாட்டிலும் கால்மாட்டிலும் பிடித்து தூக்கிக் கொண்டு போனார்கள்.

மூச்சிரைத்து இரண்டு நிமிஷம் நடப்பதற்குள் திறந்த வாயோடு ஒரு கல்லுக்குழி பார்வைக்கு கிடைத்தது.

மனிதர்களோ ஆடு மாடுகளோ அதில் விழுந்து விடக்கூடாது என்பதற்காக கல்லுக்குயைச் சுற்றிலும் முட்செடிகளைப் போட்டு வைத்து இருந்தார்கள்.

உபயதுல்லாவும் சண்முகராஜனும் அந்த முட்செடிகளை அகற்றிவிட்டு அருணாவின் உடலைத் தூக்கி செங்குத்தாக குழிக்குள் இறக்கினார்கள்.

உடல் உள்ளே இறங்கி ஆறடி போனதும் பிடியை விட்டார்கள்.

உடல் குழியின் ஆழத்தில் போய் 'தொம்ம்' என்ற சத்தத்துடன் விழுந்தது.

சின்னச் சின்ன பாறைக் கற்களையும் மண்ணையும் குழிக்குள் தள்ளி மூடினார்கள்.

குழி வேகமாய் நிரம்ப ஆரம்பித்தது.

''பண்ணிடடோம்...! பை...த...பை... கமலப்பித்தனைப் பத்தி உங்ககிட்ட கொஞ்ச விசாரிக்க வேண்டியிருக்கு...''

''என்ன விசாரிக்கணும்...''

''அவர்க்கு ஃபேமிலி இல்லை. ஒண்டி கட்டைன்னு கேள்விப்பட்டேன். உண்மையா?''

''உண்மைதான்...!''

''ஆக்ஸிடெண்ட் நடந்த ஸ்பாட்டில் இந் செல்போன் கிடைச்சுது. இது அவரோ செல்போனான்னு பாருங்க.''

ஆடலரசு ஆச்சர்யப்பட்டார். ''கமலப்பித்த செல்போனை யூஸ் பண்ணி நான் பார்த்த இல்லை. இது அவரோட செல்போனாக இருக்கா ஆக்ஸிடெண்ட்டுக்கு காரணமான பைக் ஓட்டிட்டு வந்தவரோடதாகவும் இருக்கலாம்.

''இல்லையே... பைக் ஓட்டிட்டு வந் ஆசாமிகிட்டே கேட்டுப் பார்த்தோம். அ தன்னோடது இல்லைன்னு சொல்லிட்டார். இந் செல்போனைத் தவிர இன்னொரு பொருளு ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்ல செருப்பு தைக்கி தொழிலாளிக்கு முன்னாடி போய் விழுந்திருக்கு..

''இன்னொரு பொருளா...?''

''எஸ்...''

''என்ன அது...?''

''ரிமோட் கண்ட்ரோல்'' சொன் இன்ஸ்பெக்டர் வசந்தகுமார் தன் சர்ட் பாக்கெட்டி பத்திரப்படுத்தி வைத்திருந்த தீப்பெட்டி சைஸி கால்குலேட்டர் மாதிரியான ஒன்றை எடுத்து காட்டினார். ஆடலரசு கேட்டார்.

''இது எதுக்கான ரிமோட் கண்ட்ரோல்?'



''தெரியலை.பட்... இதை ஃபாரன்ஸிக்கில் கொடுத்து விசாரித்தபோது அவர்கள் பாதி சந்தேகத்தோட ஒரு உண்மையைச் சொன்னார்கள்.''

''என்ன உண்மை...?''

''இது ஒரு வெடிகுண்டை வெடிக்க வைப்பதற்கான ரிமோட் கண்ட்ரோலாக இருக்கலாம்ன்னு சொன்னாங்க...''

ஆடலரசின் கண்களில் திகில் பரவியது.

''என்ன இன்ஸ்பெக்டர்.... நீங்க சொல்றது எதுவுமே நம்பும்படியா இல்லை...! இந்த செல்போனும் ரிமோட் கண்ட்ரோலும் கமலப்பித்தனோடதுதான்னு சொல்ல வர்றீங்களா?''

''நோ... நோ...! நான் அப்படி சொல்ல வரலை... ஆக்ஸிடெண்ட் நடந்த ஸ்பாட்டில் இந்த ரெண்டும் கிடைச்சதால ஒருவேளை இது கமலப்பித்தனுக்கு சொந்தமானதாக இருக்க லாமோன்னு மனசுக்குப்பட்டது. அதான் உங்களைக் கேட்டு கன்ஃபாம் பண்ணிக்கலாம்ன்னு வந்தேன்.''

ஆடலரசு தீர்க்கமாய் தலையாட்டினார்.

''இன்ஸ்பெக்டர்...! இந்த செல்போனும்- ரிமோட் கண்ட்ரோலும் நிச்சயமாய் கமலப் பித்தனுக்கு சொந்தமானது கிடையாது. அந்த பைக் ஆசாமியை மறுபடியும் என்கொயர் பண்ணிப்பாருங்க.

ஆடலரசு சொல்லிக் கொண்டிருக்கும்போதே இன்ஸ்பெக்டர் வசந்தகுமாரின் இடுப்பில் மாட்டப்பட்டிருந்த செல்போன் குரல் கொடுத்து கூப்பிட்டது.

வசந்தகுமார் செல்போனை எடுத்து செவிமடுத்து விட்டு முகம் மாறி ஆடலரசை ஏறிட்டார்.

''ஸார்...! உங்க பத்திரிகை ஆபீஸில் ரிட்ட காப்பிகளை வைக்கும் ஸ்டோர் ரூமில் இ டைனமைட் இருந்தது கண்டுபிடிக்க பட்டிருக்கு...''

''என்னது... டைனமைட்டா?''

''எஸ்...! இந்த ரிமோட் கண்ட்ரோ ஆக்ஸிடெண்ட் ஸ்பாட்ல கிடைச்சதுமே இ பாம் ஸ்க்வாட் உங்க பத்திரிகை அலுவலக துக்குள்ளே நுழைந்து டிடெக்டர்களை வெச் பாம் ஏதாவது இருக்கான்னு தேடிப் பார்த் இருக்காங்க. சோதனையில் ஒரு சக்தி வாய்ந் டைனமைட் உங்க பத்திரிகை ஆபீஸின் ரிட்டர் காப்பி செக்ஷனில் இருந்திருக்கு. அந் டைனமைட்டை கமலப்பித்தன் ஏன் வெச்சிருக்க கூடாது...?''

ஆடலரசு உறைந்தார். ''கமலப்பித்தன் அப்ப செய்யக்கூடிய ஆள் கிடையாது. இந்தக் 'கவசு பத்திரிகையை வளர்க்க அவனும் ரொம் பாடுபட்டிருக்கான். அவன் இந்தக் காரியத்தை பண்ணியிருக்கமாட்டான்.''

இன்ஸ்பெக்டர் வசந்தகுமார் புன்னகைத்தா ''கமலப்பித்தன் கண் விழிக்கட்டும். உண்மையு அப்போதுதான் கண் திறந்து பார்க்கும்.''

''பாமை செயலிழக்கப் பண்ணிட்டீங்க இன்ஸ்பெக்டர்....?''

''பாம் ஸ்க்வாடோட முதல் வேலை அதுதான்...! பாமை உடனடியா டிப்யூ பண்ணிட்டாங்க. அது மட்டும் ப்ளாஸ்ட்டா யிருந்தா உங்க பத்திரிகை ஆபீஸ் இருந் இடத்தில் குவியல் குவியலா மண்ணு செங்கல்லும் மனித உறுப்புக்களும் தா இருக்கும்.''



இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு நர்ஸ் வேகவேகமாய் ஐ.ஸி. யூனிட்டின் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்டாள். ஆடலரசை நெருங்கினாள்.

''ஸார்! டாக்டர் உங்களைக் கூப்பிடுறார்.''

ஆடலரசும், இன்ஸ்பெக்டரும் நர்ஸைப் பின்தொடர்ந்து உள்ளே போனார்கள்.

## 6



ஜெயிலர் உபயதுல்லாவும் வார்டன் சண்முகராஜனும் திகைப்போடு ஒருத்தரை யொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

''உபை...! இவ... ஒரு பத்திரிகைகாரி! உன்னையும் என்னையும் வேவு பார்க்க வந்திருக்கா. இவளை மட்டும் தப்ப விட்டிருந்தோம்ன்னா நம்ம ரெண்டு பேர் மானமும் பேப்பர்ல ஏலம் போடப்பட்டிருக்கும்...''

''நல்ல வேளை பார்த்துட்டோம்.''

''உயிரோடு இருக்காளா... செத்துட்டாளான்னு பாரு...!''

உபயதுல்லா அருணாவின் நாடித் துடிப்பையும் இருதயத்துடிப்பையும் சோதித்துப் பார்த்துவிட்டு சண்முகராஜனை ஏறிட்டுப் பார்த்தார்.

''உயிர் இன்னமும் இருக்கு...''

''நிறுத்திடு...''

''நிறுத்திட்டு பாடியை எப்படி டிஸ்போஸ் பண்றது...?''

''வழியிருக்கு...''

## 7



ஐ.ஸி.யூனிட்டுக்குள் வேகவேகமாய் நுழைந்த ஆடலரசையும் இன்ஸ்பெக்டர் வசந்தகுமாரையும் பாதி வழியிலேயே எதிர் கொண்டார் டாக்டர் மனோகரன்.

''வாங்க...! அந்த செல்லுக்குள்ளே போய் உட்கார்ந்து பேசலாம்...''

ஆடலரசு பதட்டமாய்க் கேட்டார்.

''டாக்டர்...! கமலப்பித்தனோட கண்டிஷன் இப்போ எப்படியிருக்கு...''

''இனிமே அதைப் பத்தி பேசி பிரயோஜனம் இல்லை.''

''டாக்டர்! நீங்க என்ன சொல்றீங்க?''

''கமலப்பித்தன் உயிர் பிரிஞ்சு ரெண்டு நிமிஷமாச்சு. ஃபர்தர் ட்ரீட்மெண்ட்டுக்காக ஒரு இஞ்செக்ஷன் போட்டபோது திடீர்ன்னு அவர்க்கு கான்ஷியஸ் வந்தது. கான்ஷியஸ் வரக்கூடாத ஸ்டேஜ் அது. அப்படி கான்ஷியஸ் வந்தா அடுத்த ரெண்டு நிமிஷ நேரத்துக்குள்ளே பேஷண்டுக்கு மரணம் நிச்சயம். நான் உடனே நர்ஸ்கிட்டே உங்க பேரைச் சொல்லி கூட்டிட்டு வரும்படியா சொன்னேன்.

ஆனா, கமலப்பித்தன் வேண்டாம்ன்னு சொல்லிட்டார். ஆசிரியர் ஆடலரசு முகத்தைப் பார்த்து பேசக்கூடிய தகுதி எனக்கு இல்லை. நான் ஒரு தப்பு பண்ண இருந்தேன். அந்தத் தப்புக்குக் கிடைச்ச தண்டனை இதுன்னு சொன்னார்...''



''தப்பா...? என்ன தப்பு...?''

''வாங்க சொல்றேன்...''

டாக்டர் மனோகரன் ஐ.ஸி;யூனிட்டுக்குள் இருந்த தன்னுடைய செல்லை நோக்கி கூட்டிப் போனார்.

செல்லுக்குள் நுழைந்ததும் இருக்கைக்கு சாய்ந்து கொண்ட டாக்டர், ஆடலரசுக்கும் இன்ஸ்பெக்டர் வசந்தகுமார்க்கும் இருக்கைகளைக் காட்டிவிட்டு பேச்சைத் தொடர்ந்தார்.

''கமலப்பித்தன் என்கிட்ட ஒரு நிமிஷ நேரம் மட்டுமே பேசியிருப்பார். திணறித் திணறி அவர் பேசினாலும் சொல்ல வேண்டியதை சொல்லிட்டுத் தான் உயிரை விட்டார்.''

''கமலப்பித்தன் என்னதான் சொன்னார் டாக்டர்?''

''மிஸ்டர் ஆடலரசு... உங்க பத்திரிகையான 'கவசம்' ஆளும் கட்சிக்கு எதிரான பத்திரிகையா?''

''ஆமா...! அதுக்காக எதிர்க்கட்சிக்கு ஆதரவாகவும் இருக்கமாட்டோம். தமிழ்நாட்டில் மட்டும் இல்லை, மத்தியிலும் எந்த கட்சி ஆட்சிக்கும் வந்தாலும் சரி நாங்க ஒரு எதிர்க்கட்சியா மாறி, செய்யற தப்புகளைச் சுட்டிக் காட்டுவோம். பல வருஷமா எங்க 'கவசம்' பத்திரிகையை இப்படித்தான் நடத்திகிட்டு வர்றோம். நாங்க எந்தக் கட்சியையும் சேராதவங்கன்னு மக்களுக்குத் தெரியும். அதனாலத்தான் எங்க பத்திரிகை சேல்ஸும் அமோகமாயிருக்கு.''

டாக்டர் மனோகரன் தலையாட்டிவிட்டு தொடர்ந்தார். ''ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு

பெரிய தொழிலதிபர் உங்க பத்திரிகை அலுவலகத்தை வெடிகுண்டு வைத்து தகர்க்க திட்டம் போட்டு அதுக்காக கமலப்பித்தனை உபயோகப்படுத்தியிருக்கார். இந்தக் காரியத்துக்காக கமலப்பித்தனுக்கு பேசப்பட்ட தொகை இந்து லட்சம். இது தவிர ரெண்டு வருஷம் கழிச்சு ஒரு புதிய பத்திரிகையை ஆரம்பிச்சு அந்தப் பத்திரிகைக்கு ஆசிரியராக போடவும் பேச்சு வார்த்தை நடந்திருக்கு...''

ஆடலரசு உறைந்து போன அதிர்ச்சியிலிருந்து மீண்டு டாக்டரிடம் பதட்டமாய் கேட்டார்.

''அந்த தொழிலதிபர் யாரு...?''

''கேட்டேன்... கமலப்பித்தன், பேரைச் சொல்லலை. வற்புறுத்தி கேட்டுகிட்டு இருக்கும்போதே உயிர் பிரிஞ்சுடுச்சு.''

இன்ஸ்பெக்டர் வசந்தகுமார் குறுக்கிட்டார்.

''டோண்ட் வொரி ஸார்...! உங்க பத்திரிகை அலுவலகத்தை கமலப்பித்தன் மூலமா வெடிகுண்டு வெச்சு தகர்க்க முயற்சி பண்ணின அந்த ஆளும்கட்சி தொழிலதிபர் யார்ங்கிறதை நான் கண்டுபிடிச்சு சொல்றேன்...''

''நோ... இன்ஸ்பெக்டர்... இந்த விஷயத்தில் உங்க போலீஸ் டிபார்ட்மெண்ட்டை நம்ப நான் தயாராக இல்லை. அந்தத் தொழிலதிபரைக் கண்டுபிடிக்க உங்க போலீஸ் டிபார்ட்மெண்ட் முயற்சி எடுத்துக்கிட்டா ஆளும் கட்சி சும்மா இருக்குமா....? அதுவுமில்லாமே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அந்தக் கட்சிக்கு விசுவாசமாயிருக்கிற டிபார்ட்மெண்ட்களில் உங்க டிபார்ட்மெண்ட்டுக்குத்தான் முதலிடம். அந்த தொழிலதிபர் யார்ங்கிறதைக் கண்டுபிடிக்க எனக்கு



வழிமுறைகள் தெரியும். கண்டுபிடிச்ச பின்னாடி என்ன நடவடிக்கைகள் எடுக்கணும்ன்னும் எனக்குத் தெரியும்...''

ஆடலரசு ஆவேசமாய் பொரிந்து கொண்டிருக்கும் போதே அவருடைய செல்போன் கூப்பிட்டது.

எடுத்தார்.

''எஸ்...''

மறுமுனையில் சற்றே பதட்டமான ஒரு ஆண்குரல். ''ஸார்...! நான் அருணாவோட அண்ணன் விக்னேஷ் பேசறேன்...''

''சொல்லு விக்னேஷ்... என்ன விஷயம்...?''

''அருணா அங்கே இருக்காளா ஸார்...?''

''இல்லையே... பேட்டி எடுக்கிறதுக்காக வெளியே போயிருக்கா....''

''ஸார்... இப்ப மணி ரெண்டு நாப்பது. ஒரு மணிக்கே வீட்டுக்கு வந்து லஞ்ச் சாப்பிடறதா சொல்லிட்டு போனா... இன்னும் வரலை... அவளுக்காக இவ்வளவு நேரம் வெயிட் பண்ணிப் பார்த்துட்டு உங்களுக்கு போன் பண்றேன். நீங்க எங்கேயாவது அவளை அனுப்பியிருக் கீங்களா...?''

''சிறையதிகாரிகள் ரெண்டு பேரை பேட்டி எடுக்கிறதுக்காக மத்திய சிறைச்சாலைக்கு போகணும்ன்னு என்கிட்டே சொல்லியிருந்தா. காலையில் பத்தரை மணிக்கே புறப்பட்டு போய்ட்டா. பேட்டி எடுக்க ரெண்டு மணி நேரமே ஆகியிருந்தாலும் ஒரு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்து இருக்கணுமே...! வர லேட்டாகும்ன்னு அருணா எங்கிருந்தாவது போன் பண்ணினாளா...?''

''இல்ல... ஸார்...''

‘‘லேட்டானா போன் பண்ணாமே இருக்க மாட்டாளே...! விக்னேஷ்...!’’

‘‘ஸார்...’’

‘‘நீ வீட்லயே இரு... நான் மத்திய சிறைச் சாலைக்கு போன் பண்ணி அருணா அங்கே பேட்டி எடுக்க வந்தாளான்னு விபரம் கேட்டுட்டு உனக்கு போன் பண்றேன்.’’

‘‘ஸார்! எனக்கு பயமாயிருக்கு.’’

‘‘பயப்படாதே.... விக்னேஷ்...! அருணாவுக்கு எந்த ஆபத்தும் வந்திருக்காது. அவ போன் பண்ணாமே இருக்கான்னா ஏதாவது ஒரு முக்கியமான காரணம் இருக்கும். நீ வீட்லயே இரு. நான் பத்து நிமிஷத்துல உன்னைக் கூப்பிடறேன்.’’

ஆடலரசு செல்போனை அணைத்து மறுபடியும் உயிர்ப்பித்து மத்திய சிறைச்சாலையைத் தொடர்பு கொண்டார்.

மறுமுனையில் ஜெயில் சூப்பரிண் டெண்டெண்ட் இன்பமணி பேசினார்.

‘‘ஹலோ! யாரு...?’’

‘‘நான் ஆடலரசு... கவசம் பத்திரிகையோட ஆசிரியர்.’’

‘‘ஓ...! எடிட்டர் ஸாரா...! சொல்லுங்க.’’

‘‘எங்க பத்திரிகையின் சீஃப் ரிப்போர்ட்டர் அருணா அங்கே இருக்காங்களா...?’’

‘‘இல்லையே...!’’

‘‘சிறையதிகாரிகளைப் பார்த்து பேட்டி எடுக்கணும்ன்னு, பத்தரை மணிக்கே புறப்பட்டு அங்கே வந்தாங்களே...?’’



‘‘ஸாரி...! காலையில் எட்டு மணியிலிருந்து இந்த நிமிஷம் வரைக்கும் உங்க பத்திரிகை யிலிருந்து பேட்டிக்காக யாரும் வரலை...’’

‘‘உங்க ஜெயிலரையும் வார்டனையும் கேட்டுப்பாருங்களேன்...’’

‘‘அவங்க ரெண்டு பேருமே இப்ப சிறைச் சாலை ஸ்பாட்ல இல்லை எடிட்டர் ஸார்... காலையில் ஏழு மணிக்கே பரங்கிமலைக்குப் பக்கத்தில் இருக்கிற கல் க்வாரிக்கு கைதிகளைக் கூட்டிகிட்டு போய்ட்டாங்க...’’

ஆடலரசு தன் செல்போனை யோசனையாய் அணைத்து சட்டைப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டார். அவர் முகம் முதல் தடவையாய் கவலை மேகங்களால் சூழப்பட்டு இருண்டது.

## 8



சிறைத்துறை ஐ.ஜி. ஈஸ்வர் நள்ளிரவைக் கடந்த அந்த இரவு நேரத்தில் சி[illegible] இருந்த தன்னுடை[illegible] போட்டுக் கொண்டிருக்க –

எதிரே –

ஜெயில் சூப்பரிண்ட்டெண்டெண்ட் இன்ப மணி, ஜெயிலர் உபயதுல்லா வார்டன் சண்முகராஜன் போலி பவ்யத்தோடு தலை குனிந்து நின்றார்கள்.

ஐ.ஜி. ஈஸ்வர் கோபமாய் மேஜையின் மேல் இறைந்து கிடந்த எல்லா பத்திரிகைகளையும் காட்டிக் கொண்டே ஆவேசமாய் பேசினார். ‘‘அந்த பத்திரிகை ரிப்போர்ட்டர் அருணா காணாமே போய் இன்னிக்கு நாலாவது நாள். எல்லா பத்திரிகைக்

காரங்களும் இந்த மேட்டரை மையமா வெச்சி கிழிகிழின்னு கிழிச்சிட்டு இருக்காங்க. எல்லா டி.வி.சேனலும் ஃப்ளாஷ் நியூஸ் போட்டு டென்ஷனை க்ரியேட் பண்றாங்க. உண்மையிலேயே அந்த பத்திரிகை ரிப்போர்ட்டர் பெண் அருணாவுக்கு என்ன நடந்தது... அவள் இங்கே பேட்டி எடுக்க வந்தாளா...? ஐ.ஜி.ஈஸ்வர் கோபமாய் கேட்க—

ஜெயில் சூப்பரிண்ட்டெண்டெண்ட் இன்பமணி குறுக்கிட்டார்.

"சாரி...! அந்தப் பெண் அருணா நாலு நாளைக்கு முன்னாடி நான் எக்ஸ் மினிஸ்டர் இராஜாங்கம் செல்லில் இருந்தபோது இராஜாங்கத் தோட செல்போனுக்கு அவ போன் பண்ணியிருந்தா. அவரை பேட்டி எடுக்க அப்பாய்ண்மெண்ட் வேணும்ன்னு கேட்டா..."

"அவரை எதுக்காக பேட்டி எடுக்க விரும்பினா...?"

"ஜெயில்ல நாம் இராஜாங்கத்துக்கு கொடுத்துட்டிருக்கிற இராஜமரியாதை உபச் சாரங்கள் எல்லாம் அரசல் புரசலா வெளியே தெரிய ஆரம்பிச்சிடுச்சு ஸார். அதெல்லாம் உண்மையா பொய்யான்னு பார்க்கிறதுக்காக அந்த அருணா வர எண்ணியிருக்கலாம் ஸார்."

"அருணா போன் பண்ணினதுக்கு இராஜாங்கம் என்ன சொன்னார்...?"

"அந்தப் பொண்ணு என்னை பேட்டி எடுக்க வரட்டும்... ஆனா உயிரோடு திரும்பிப் போகக் கூடாதுன்னு சொன்னார். மறுநாள் மத்தியானம் மூணு மணியிலிருந்து நாலு மணிக்குள்ளே இந்த அருணாவை வரும்படியாய் சொல்லியிருந்தார். அதுக்குள்ளே அவளே காணாமே போயிட்டா. இப்போ பழி சிறையதிகாரிகளான நம்ம மேலே..."



"அருணா காணாமப் போனதுக்குக் காரணம் சிறை நிர்வாகம்தான்னு எல்லா மீடியாவும் ஸ்ட்ராங்கா சொல்லிட்டிருக்கு. இதை பொய்ன்னு எப்படி நிரூபிக்கப் போகிறோம்...?"

ஜெயிலர் உபயதுல்லா குறுக்கிட்டார். "ஸார்! இதை அப்படியே இக்னோர் பண்ணிடலாம். லாக்கப்புக்கு வந்த ஒருத்தன் இயற்கையாவே ஹார்ட் அட்டாக் வந்து செத்தாக்கூட போலீஸ்தான் அடிச்சு கொன்னுட்டாங்கன்னு பிரஸ் பீப்பிள் சொல்றதும் அதை ஜனங்க நம்பறதும் சகஜம்தான் ஸார்..."

"நோ...! இந்த விஷயத்தை நாம இக்னோர் பண்ண முடியாது. இன்னிக்கு தமிழ்நாட்டில் இருக்கிற எல்லாப் பத்திரிகைகளும் போலீஸுக்கும் இந்த அரசாங்கத்துக்கும் எதிராகத் திரும்பி யிருக்கு... நாம் குற்றமற்றவர்கள். அருணா காணாமல் போனதுக்கும் பத்திரிகை ஆபீஸில் வெடிகுண்டு வைத்த சம்பவத்துக்கும் போலீஸ் நிர்வாகத்துக்கோ சிறை நிர்வாகத்துக்கோ தொடர்பு இல்லைன்னு நிரூபிக்கணும்."

"எப்படி ஸார் நிரூபிக்கிறது...?"

"எனக்கு ஒரு சந்தேகம்..."

"என்ன ஸார்?"

ஐ.ஜி.ஈஸ்வர் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டுத் தொடர்ந்தார்.

"கவசம் பத்திரிகை ஆபீஸில் வெடிகுண்டு வைக்கப்பட்டதுக்கும் பத்திரிகை ரிப்போர்ட்டர் அருணா காணாமல் போனதுக்கும் ராஜாங்கம் ஏன் காரணமாய் இருக்கக் கூடாது...?"

"மோட்டிவ் ஸார்...?"

"மோட்டிவ்தான் க்ளீயரா இருக்கே...?

இராஜாங்கம் ஜெயில்ல சொகுசாய் இருக்கிற விஷயங்களை 'கவசம்' பத்திரிகை கிண்டல் பண்ணி கார்ட்டூன்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டிருக்கே. போதாக்குறைக்கு பேட்டி எடுக்க வர்றதா அப்பாயிண்ட்மெண்ட் கேட்டு அருணா போன் பண்ணியிருக்கா. இதெல்லாம் இராஜாங்கத்தை உஷ்ணப்படுத்தியிருக்கு. ஸோ இராஜாங்கம் ஜெயில்ல இருந்துகிட்டே வெளியே இருக்கிற ஆட்களுக்கு தகவல் கொடுத்து இந்தக் காரியங்களைப் பண்ணியிருக்கலாம் இல்லையா?''

ஜெயில் சூப்பரிண்ட்டெண்டெண்ட் இன்பமணி தயக்கமாய்க் குறுக்கிட்டார்.

''இராஜாங்கம் அப்படிப்பட்ட காரியங்களைப் பண்றதாயிருந்தா என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருப்பார் ஸார்...''

''இதை சொல்லாமலே அவர் பண்ணியிருக்கலாம் இல்லையா...!''

''அது... வந்து...''

''வாங்க...! இராஜாங்கத்தைப் பார்த்து நேர்லயே கேட்டுட்டு வந்துடலாம். 'கவசம்' பத்திரிகை ஆபீஸில் வெடிகுண்டு வெச்சதுக்கும், அருணா காணாமல் போனதுக்கும் இராஜாங்கம் தான் காரணம்ன்னு தெரிய வந்தால் மேற்கொண்டு இந்தப் பிரச்சனைகளை எப்படி கையாண்டால் நாம் பழியிலிருந்து தப்பிக்க முடியும்ங்கிறதை இன்னிக்கு ராத்திரியே நாம பேசியாகணும்.''

''எஸ்... ஸார்...'' இன்ப்மணி சொல்ல ஐ.ஜி. ஈஸ்வர் எழுந்தார்.

நான்கு பேரும் அறையைவிட்டு வெளியே வந்து மங்கலான வெளிச்சம் பரவிக் கிடந்த சிறைச்சாலை வராந்தாவில் நடந்தார்கள்.



சில நிமிஷ நடையில் இராஜாங்கம் அடைக்கப்பட்டிருந்த செல்லுக்கு முன்பாய் வந்து நின்றார்கள். கம்பிக் கதவில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டுக்கு விடுதலை கொடுத்து உபயதுல்லா கதவைத் தள்ளினார். அது க்றீச்சிடு உள்ளே போயிற்று.

கட்டிலில் குப்புறப்படுத்து ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த இராஜாங்கத்துக்கு முன்பாய் போய் இன்பமணி பவ்யமாய் நின்றார்.

''அய்யா...!''

''....''

''அய்யா... ஐ.ஜி. உங்களைப் பார்த்து பேசறதுக்காக வந்திருக்காங்க. ரெண்டே நிமிஷம்! பேசிட்டு போயிடறோம். இந்த ராத்திரி நேரத்துல வந்து... உங்களைத் தொந்தரவு படுத்தறதுக்.....''

இன்பமணியின் பேச்சு சட்டென்று நிற்க கட்டிலுக்கு கீழே பரவியிருந்த ரத்தம் அவருடைய விழிகளை நிலைகுத்த வைத்தது.

''அ...அ...அய்யா...''

இராஜாங்கத்தை மல்லலாத்தினார் இன்பமணி. மல்லாந்த இராஜாங்கத்தின் விறைத்த விழிகள் இலக்கில்லாமல் வெறிக்க கடைவாயில் ஒரு ரத்த நூல் ஒழுகி உறைந்து போயிருந்தது.

## 9



மறுநாள் காலை பதினோரு மணி.

ஜி.ஹெச்.

ஜீப்பில் வந்து இறங்கிய ஐ.ஜி. ஈஸ்வரை, இன்பமணி எதிர்கொண்டார். சல்யூட் பதித்தவரிடம் ஈஸ்வர் கேட்டார்.

இராஜாங்கத்தின் போஸ்ட் மார்ட்ட
முடிந்ததா?''

''முடிந்தது ஸார்! டாக்டர் பட்டாபிராமன் உங்களுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கார்...''

பத்திரிகை நிருபர்கள் ஓடி வந்து ஈஸ்வரை சூழ்ந்து கொண்டார்கள்.

''மரணம் எப்படி ஸார்?''

''கொலையா?''

''போலீஸே அடிச்சு கொன்னுட்டதா எதிர்க் கட்சித் தலைவர் சொல்றார்... அதுக்கு உங்க பதில் என்ன ஸார்?''

''இராஜாங்கம் விஷம் சாப்பிட்டு தற்கொலை பண்ணிக்கிட்டதாக ஆளும் கட்சி சொல்லிகிட்டு இருக்காங்க. இதைப்பத்தி உங்க கருத்து என்ன ஸார்...?''

நிருபர்கள் சுற்றிலும் நின்று கொண்டு கேள்விகளை வீச ஈஸ்வர் கையமர்த்தினார்.

''போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் இன்னமும் கைக்கு வரலை. இன்னும் கொஞ்ச நேரத்துக் குள்ளே இராஜாங்கம் எப்படி செத்தார் என்கிற கேள்விக்கு விடை தெரிஞ்சுடும்... பொறுமையா இருங்க.''

ஈஸ்வர் சொல்லிக் கொண்டே நிருபர்களைப் பிளந்து நடந்தார். இன்பமணி பின்தொடர்ந்தார்.

''இந்தப் பத்திரிகைக்காரங்களோடு பெரிய தொல்லை ஸார்... வேண்டாத கேள்விகளை யெல்லாம் கேட்டு வீண் பிரச்சனையை உண்டு பண்றாங்க...''

ஹாஸ்பிட்டலின் காஷுவாலிடி வார்டைக் கடந்து மார்ச்சுவரி அறைக்குப் போகும் வராந்தாவில் நடந்தார்கள்.



ஈஸ்வர் சொன்னார்.

''மரணம் இயற்கையானதாக இருந்துட்டா பரவாயில்லை. இல்லேன்னா தலைவலிதான்.''

''ஸார்... இது ஒரு மர்டரா இருந்துட்டா அதை நம்மால ஃபேஸ் பண்ண முடியுமா...?''

''மொதல்ல போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை பார்ப்போம்.''

வேகவேகமாய் நடந்தார்கள்.

ஹாஸ்பிட்டல் வளாகத்தின் கோடியில் இருந்த மார்ச்சுவரி அறையை அவர்கள் அடைந்த போது—

அறைக்கு வெளியே பரவியிருந்த காலித் திடலில் இராஜாங்கத்தின் கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் கறுப்பு பேட்ஜ் அணிந்து கொடிகளை உயர்த்திப் பிடித்து சத்தம் போட்டுக் கொண் டிருந்தார்கள்.

அஸிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர் டானியேல் மாணிக்கம், ஐ.ஜி.ஈஸ்வரை எதிர் கொண்டு மார்ச்சுவரிக்கு உள்ளே கூட்டிக் கொண்டு போனார்.

பார்மலின் நாற்றம் சுவாசம் வழியாக உள்ளே போய் குடலை உருவிவிட்டது.

இராஜாங்கத்தின் போஸ்ட்மார்ட்டத்தை முடித்துவிட்டுக் காத்திருந்த டாக்டர் பட்டாபிராமன், ஈஸ்வரைப் பார்த்ததும் பக்கத்தில் வந்தார்.

''உங்களுக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருக்கோம்... மிஸ்டர் ஈஸ்வர்.''

''சொல்லுங்க... டாக்டர்... என்ன விஷயம்? இராஜாங்கத்தோட மரணம் இயற்கையானது தானே...?''

''அப்படியிருந்தா போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை எப்பவோ ஃபில்லப் பண்ணி

அஸிஸ்ட்டெண்ட் கமிஷனர்கிட்டே கொடுத்துட்டு நான் பாட்டுக்கு போயிருப்பேனே...?''

''பிறகு எப்படி டாக்டர் மரணம்?''

''மர்டர்...''

''மர்டரா...?''

''எஸ்...''

''உடம்புல ஒரு சின்னக் காயம்கூட இல்லையே... டாக்டர்...''

''காயம் இருக்கு. பட்... கண்ணுக்குத் தெரியாத கடுகு சைஸ் காயம்.''

''கடுகு சைஸ் காயமா?''

''எஸ்...! வாங்க காட்றேன்...!'' சொன்ன டாக்டர் பட்டாபிராமன் இராஜாங்கத்தின் உடல் கிடத்தப்பட்டிருந்த மேஜைக்கு கூட்டிக் கொண்டு போனார்.

இடுப்பில் மட்டும் ஒரு உள்ளாடையுடன் மல்லாந்து கிடந்த இராஜாங்கத்தின் உடலை நெருங்கிய டாக்டர் இராஜாங்கத்தின் இடது பக்க மார்புப்பகுதியைக் காட்டினார்.

''இந்த மார்புப் பகுதியைப் பாருங்க.''

ஈஸ்வர் பார்த்தார்.

''காயம் தெரியுதா?''

''தெரியலையே...!''

''நல்லாப் பாருங்க மிஸ்டர் ஈஸ்வர். கருஞ்சிவப்பு நிறத்தில் ஒரு ரத்தப்புள்ளி உங்க பார்வைக்குப் புலப்படுதா?''

பார்த்தார் ஈஸ்வர்.



கடுகு சைஸில் ஒரு ரத்தப்புள்ளி உறைந்து தெரிந்தது. டாக்டரைப் பார்த்து புன்னகைத்தார் ஈஸ்வர்.

''இது எப்படி டாக்டர் காயமாகும்?''

''காயம்தான்...! இந்த ரத்தப் புள்ளிதான் இராஜாங்கத்தின் உயிரைப் பறிச்சிருக்கு...''

''எப்படி... எப்படி... டாக்டர்...?'' ஈஸ்வர் திகைத்தார்.

''கொலையாளி ஒரு நீளமான ஊசியாலே இராஜாங்கத்தின் இடது மார்பில் குத்த அந்த ஊசி கீழே இறங்கி அவரோட இருதயத்தில் ஓட்டை போட்டிருக்கு... ஊசியால குத்தப்பட்ட இதயம் ரத்தத்தைக் கொஞ்சம் கொஞ்சமா வெளியேற்றி துடிப்பை நிறுத்தியிருக்கு...''

''இருதயத்துக்குள்ளே ஊசியை இறக்கியிருக்காங்களா...?''

''எஸ்...''

''டாக்டர்! ஜெயிலுக்குள்ளே இப்படியொரு சம்பவம் நடக்க சாத்தியமே கிடையாது...''

''அதைப்பத்தியெல்லாம் எனக்குத் தெரியாது மிஸ்டர் ஈஸ்வர். இராஜாங்கத்தின் மரணம் ஒரு கோல்ட் ப்ளட்டட் மர்டர். ஆனா, இதை மர்டர்ன்னு சொன்னா எதிர்க்கட்சிக்காரங்க தமிழ்நாட்டில் ஒரு பெரிய கலவரத்தையே உருவாக்கிருவாங்க. அதனால போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டில் இராஜாங்கத்தின் மரணம் இயற்கையானது. மூளைக்குப் போகும் ஒரு ரத்தக் குழாய் வெடிச்சதால மரணம் ஏற்பட்டதா எழுதச் சொல்லி ஆளும் கட்சியிலிருந்து ப்ரஷர். இதுக்கு உங்க பதில் என்ன?''

ஈஸ்வர் யோசித்துவிட்டு தோள்களை குலுக்கிக் கொண்டார்.

''அரசாங்கமே போஸ்ட்மார்ட்டம் ரிப்போர் இப்படித்தான் இருக்கணும்ன்னு சொல்லிட்ட பிறகு நான் மறுத்து சொல்ல முடியுமா என்ன...' இராஜாங்கத்தோட மரணம் இயற்கையானதுன்னே ரிப்போர்ட் கொடுத்துடுங்க டாக்டர்...''

டாக்டர் பட்டாபிராம் தன் கையில் வைத் இருந்த சாணி நிற போஸ்ட் மார்ட்ட ரிப்போர்ட்டுகளை ஃபில்லப் செய்வதற்காக நகர்ந் போக –

அஸிஸ்டெண்ட் கமிஷனர் டேனிய மாணிக்கம் ஈஸ்வர்க்குப் பக்கத்தில் வந்தார்.

''ஸார்...''

ஈஸ்வர் திரும்பினார். ''என்ன?''

''இராஜாங்கம் இப்படி குரூரமான முறையி கொலை செய்யப்பட்டதுக்கு காரணமானவர்க யார்ன்னு எனக்குத் தெரியும் ஸார்.''

''யாரு...?''

''கலசம்' பத்திரிகையின் ஆசிரியர் ஆடலரசு விக்னேஷும்...''

''விக்னேஷா...? யாரது...?''

''கானாமல் போன பெண் ரிப்போர்ட்ட அருணாவோட அண்ணன்.....''

''இராஜாங்கத்தை கொலை செய் ஆடலரசுக்கும் விக்னேஷுக்கும் என் மோட்டிவ்...?''

''அருணா காணாமே போனதுக்குக் காரண இராஜாங்கம்தான் ஆடலரசும், விக்னேஷும் பிர ரிப்போர்ட்டர்களுக்கு பேட்டி கொடுத்து இருக்காங்



ஸார்... அவங்க ரெண்டு பேரையும் அரஸ்ட் பண்ணி லாக்கப்புக்கு கொண்டு போனா உண்மையைத் தோண்டி எடுத்துடலாம் ஸார்.''

''உங்களால அது முடியுமா?''

''முடியும் ஸார்.''

''அப்படின்னா ரெண்டு பேரையும் அரஸ்ட் பண்ணுங்க...''

ஈஸ்வர் சொல்ல டானியேல் மாணிக்கம் சந்தோஷத்துடன் ஒரு சல்யூட்டைக் கொடுத்துவிட்டு பூட்ஸ் சத்தம் கனமாய் ஒலிக்கப் புறப்பட்டார்.

## 10



போலீஸ் கண்ட்ரோல் ரூம்.

சீஃப் கண்ட்ரோல் ஆபீஸர்க்கு அந்த போன்கால் வந்தபோது அவர் மெது போண்டாவை மென்று டீ குடித்துக் கொண்டிருந்தார். அவசர டெலிபோன் கூப்பிட்டதும் ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தார்.

''எஸ்...''

''அவசரப் போலீஸுங்களா?'' மறுமுனையில் ஒரு ஆண் பாமரக் குரல் கேட்டது.

''ஆமா...! அந்தப் பக்கம் பேசறது யாரு...?''

''அய்யா! என் பேர் சாமித்துரைங்க. பூந்தமல்லிக்கு போற ரோட்டில் புளியந்தோப்புங்கிற இடத்திலிருந்து பேசறேன்...''

''சொல்லு...''

"புளியந்தோப்புக்கு எதில ஒரு
வெச்சிருக்கேன்ங்க..."

"விஷயத்தைச் சொல்லு. எதுக்காக
பண்ணியிருக்கே...?"

"அய்யா... ஒரு மணி நேரத்துக்கு மு
ஒரு போலீஸ் ஜீப் புளியந்தோப்புக்குள்ளே
போச்சங்க. உள்ளே போன ஜீப் ரொம்ப
வராமே போகவே நான் சந்தேகப்பட்டு உள்
போய் பார்த்தேன்ங்க. ஜீப் ஒரு மரத்து
பின்னாடி நின்னுட்டிருந்தது. ஜீப் டிரைவ
பக்கத்திலேயே இன்னொரு போலீஸ் அதிகா
மயங்கி கிடந்தாங்க. நான் எழுப்பிப் பார்த்
அவங்க எந்திரிக்கலை. உடனே உங்களு
வந்து போன் பண்றேன்."

சீஃப் கண்ட்ரோல் ஆபீஸர் பதட்டமா

"எந்த இடம்னு சொன்னே?"

"புளியந்தோப்புங்கய்யா!"

"நீ ரோட்லயே நின்னுட்டிரு... போலீஸ்
வந்துடுவாங்க..."

"சரிங்கய்யா" மறுமுனையில் ரி
வைக்கப்பட்டு விடவே –

சீஃப் கண்ட்ரோல் ஆபீஸர் அந்தச் செய்
ஆர்.எ.எஃப்க்கு கடத்த –

அடுத்த ஐந்து நிமிஷ நேரத்துக்குள்
ஜீப்பும் வேனும் புளியந்தோப்பை நோ
புறப்பட்டது.

இருபது நிமிஷமே புயல் பயணம்.

புளியந்தோப்பு வந்தது. ரோட்டின்
திலேயே லுங்கியும் பனியனுமாய் நின்றி
சாயித்துரை ஓடி வந்தான்.

"அய்யா!"



"ஜீப்ல ஏறு..." முன்னால் உட்கார்ந்திருந்த போலீஸ் அதிகாரி ஒருவர் குரல் கொடுக்க சாயித்துரை ஜீப்பில் தொற்றிக் கொண்டு தோப்புக்குள்ளே வழிகாட்டிக் கொண்டு போனான்.

அடர்த்தியான புளியந்தோப்பில் மண்பாதை மூன்று மரங்களுக்கு மத்தியில் வளைந்து கொண்டு போயிற்று.

"அந்தப் பக்கம் ஸார்" சாயித்துரை கைகாட்டிய பக்கம் போலீஸ் ஜீப்பொன்று தெரிய – போலீஸ் அதிகாரிகள் இறங்கி ஓடினார்கள். கூடவே அழைத்து வந்த டாக்டரும்,

ஜீப்பின் டிரைவிங் சீட்டில் டிரைவரும் பக்கத்திலேயே ஒரு போலீஸ் அதிகாரியும் தலைகள் துவண்டு கிடந்தார்கள்.

டிரைவரைக் கீழே கிடத்திவிட்டு போலீஸ் அதிகாரியைத் தொட்டுத் தூக்கியவர்கள் திடுக்கிட்டார்கள்.

அஸிஸ்டண்ட் கமிஷனர் டேனியல் மாணிக்கம் ரத்தத்தில் நனைந்து கிடந்தார். கடைவாயிலும் மூக்குத் துவாரங்களிலும் ரத்தப் பொட்டுக்கள்.

டிரைவரைப் புரட்டிப் பார்த்தார்கள். அவருடைய உடம்பில் உயிர் இருப்பதற்கு அறிகுறியாய் நாசித் துவாரங்களில் நூலிழையாய் சுவாசம் வந்து கொண்டிருந்தது.

முகத்தில் தண்ணீர் தெளித்து பத்து நிமிஷம் உலுக்கியபின் அவர் கண்களைத் திறந்து மலங்க மலங்க விழித்தார். பின் பீதி விலகாத முகத்தோடு பேச ஆரம்பித்தார்.

"ஏ.சி. ஸார் ஜீப்புல வந்து உட்கார்ந்ததும் 'கவசம்' பத்திரிகை ஆபீஸுக்கு போலாம்னு சொன்னார்.

நானும் ஜீப்பை நகர்த்தி ரோட்டுக்கு வந்தே திடீர்னு என் கழுத்துல ஏதோ ஊர்ந்த மா இருக்கவே திரும்பிப் பார்த்தேன். ரிவால் தெரிஞ்சுது. கூடவே பின்னாடி குரலும் கேட்ட

''டிரைவர்...! திரும்பிப் பார்க்காமே கா ஓட்டணும். ஏ.ஸி.ஸார்...! உங்களுக்கும்தா சொல்றேன். திரும்பிப் பார்த்தா தோட்டா உ பின் மண்டைக்குள்ளே பாயும். மூ கண்ணாடியில் சிதறும். இந்த கன்றாவியெல்ல நடக்கக் கூடாதுன்னு நான் நினைக்கிறே நீங்களும் ஒத்துழைப்பு கொடுக்கணும்'ன் சொன்னான். ஏ.சி. ஸாரும் நானும் அப்செட் மிட்டோம். அவன் ஜீப்பை பூந்தமல்லிப் பக் ஓட்டச் சொன்னான். நானும் ஓட்டினேன்.''

''ஆள் எப்படியிருந்தான்...?''

''ரியர் வ்யூ கண்ணாடி வழியா பார்க்க முயற் பண்ணினேன். மிரர் ஆங்கிள் சரியா இல்லாததினா பார்க்க முடியலை... ஏ.சி.ஸார் ரெண்டு தட அவனைப் பார்க்க முயற்சி பண்ணினபோ பிஸ்டலால் அவரை அடிச்சான். இன்னொரு தட திரும்பிப் பார்க்க முயற்சி பண்ணினால் சுட்டு தள்ளறதைத் தவிர எனக்கு வேற வழியில்லைன் அவன் சொன்ன பிறகு நாங்க ரெண்டு பேரு திரும்பிப் பார்க்கலை. அப்புறம் ஜீப்பை புளியந்தோப்புக்கு விடச் சொன்னான் புளியந்தோப்புக்கு வந்தோம்.''

''அவன் எதுக்காக உங்களைக் கடத்தினான்?''

''அவனோட கோபம் முழுக்க ஏ.சி.ஸா மேல்தான் இருந்தது. அவர் சப்–இன்ஸ்பெக்டரா இருந்தபோது நடந்த லாக்கப் டெத்கள், இன் பெக்டராய் இருந்தபோது நடந்த கற்பழிப்புகள்



சர்க்கிள் இன்ஸ்பெக்டராய் இருந்தபோது கள்ளச் சாராயத் தொழிலுக்கும் விபச்சாரத்தொழிலுக்கும் ஆதரவாக இருந்தது – அஸிஸ்டெண்ட் கமிஷனரான பிறகு அவர் முறைகேடாய் வாங்கியவை, கிரிமினல்களுக்குப் பாதுகாப்பாய் இருந்தது இதையெல்லாம் பட்டியல் போட்டு சொல்லிகிட்டே வந்தான். ஏ.சி.ஸார் ஒரு கட்டத்துல அவன்கிட்டே மன்னிப்பு கேட்டார்.

''எல்லாக் குற்றத்தையும் ஒத்துக்கறேன். என்னை ஒண்ணும் பண்ணிடாதே'ன்னு கெஞ்சினார். ஆனா, அவன் திடீர்னு தன்னோட வலது கையை ஒரு மாதிரியாய் சாய்த்து ஏ.ஸி.ஸார் கழுத்துல ஒரு வெட்டு வெட்டினான். அவர் அப்படியே சீட்ல சரிஞ்சு விழுந்தார். நான் அவரைப் பிடிக்கப் போனபோது என் கழுத்திலேயும் ஒரு வெட்டு விழுந்தது. அந்த வெட்டு விழுந்ததுமே கண்ணுக்குள் இருட்டு பரவியது. அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.'' சொன்ன டிரைவர் தன் கண்களை அலையவிட்டு சுற்றும் முற்றும் பார்த்தார்.

''ஏ.சி.ஸார்க்கு ஒண்ணும் ஆகலையே?''

''வந்தவன் வேலையை முடிச்சுட்டுப் போய்ட்டான். ஜெயில்ல இராஜாங்கம் கொலை செய்யப்பட்ட மாதிரியே ஏ.ஸி.டேனியல் மாணிக்கத்தையும் தீர்த்துக் கட்டியிருக்கான்.''

## 11



**போ**லீஸ் டிபார்ட்மெண்ட் மொத்தமும் கொதித்துப் போயிருந்தது. டி.ஜி.பி. குலசேகரன் எல்லா டி.வி. சேனல்களுக்கும் ஆவேசமாய் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தார்.

''பட்டப் பகலில் ஒருவன் ஒரு உதவி போலீ கமிஷனரை போலீஸ் ஜீப்பிலேயே கடத்தி கொண்டு போய் கொலை செய்து இருக்கிறா இந்த விஷயத்தை நாங்கள் சும்மா விட போவதில்லை...''

''என்ன செய்யப் போகிறீர்கள்?'' ஒரு நிருப கேட்டார்.

''போலீஸ் இலாகா திறமையாகச் செயல்ப முடியாததற்குக் காரணமே இங்கே உள் அரசியல்வாதிகள்தான். அரசியல்வாதிகள் போட்டுக் கொள்ளும் சண்டைகளால் நாங்கள் பொது மக்களிடம் கெட்ட பெயர் வாங்குகிறோம். தமிழ்நாட்டில் உள்ள எல்லா கிராமங்களிலும் ஏதாவது ஒரு கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதி கள்ளச் சாராயம் காய்ச்சுகிறான். விபச்சாரத் தொழில் நடத்துகிறான். இதில் சில பேர் எம்.எல்.ஏ.க்களாக இருப்பதுதான் கொடுமை. இந்த மாதிரியான எம்.எல்.ஏ.க்களுக்கு அந்த ஊர் போலீஸ் ஒத்துழைப்பு கொடுக்கவில்லையென்றால் அந்த போலீஸ் அதிகாரிகள் பந்தாடப்படுகிறார்கள். நாங்களும் மனிதர்கள்தான். எங்களுக்கும் குடும்பம் இருக்கிறது. அரசியல்வதிகள் ஒருத்தரை யொருத்தர் அடித்துக் கொள்ளட்டும். வெட்டிக் கொண்டு சாகட்டும். எங்களை ஏன் பலிகடா வாக்குகிறார்கள்...?''

ஒரு நிருபர் குறுக்கிட்டார்.

''கொலை செய்யப்பட்ட டேனியல் மாணிக்கம் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று சொல்கிறீர்களா?''

''அவர் குற்றங்கள் செய்தவர்தான். பினாமி பெயரில் ஒரு ஹோட்டலைக் கட்டியிருக்கிறார். அதில் பிரதான பிசினஸ் விபச்சாரம்தான் என்பது எனக்கும் தெரியும். எந்த கட்சி ஆட்சிக்கு



வந்தாலும், அந்தக் கட்சிக்கு ஜால்ரா தட்டிக் கொண்டு அவர்கள் செய்த க்ரிமினல் வேலை களுக்கெல்லாம் உடந்தையாக இருந்தவர்தான். அதற்காக இப்படியொரு கோரமான முடிவு அவர்க்கு நேர்ந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை. டேனியல் மாணிக்கம் தண்டிக்கப்பட வேண்டியவர் என்றால் அவர் கோர்ட்டு மூலமாகத்தான் தண்டிக்கப்பட வேண்டும். இப்படி இருதயத்தில் ஒட்டை போட்டு அல்ல.''

பக்கத்தில் இருந்த சிறை ஐ.ஜி.ஈஸ்வர் கண்களில் கோபம் கொப்பளிக்க குறுக்கிட்டுப் பேசினார்.

''இன்றைக்கு மாலை ஒட்டு மொத்த உயர் போலீஸ் அதிகாரிகளும் முதலமைச்சரை சந்தித்துப் பேச இருக்கிறோம். போலீஸ் அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரம் வேண்டும். அரசியல்வாதிகள் யாரும் எந்த சிபாரிசுக்கும் போலீஸ் ஸ்டேஷன் படி ஏறக்கூடாது. கள்ளச் சாராயப் பேர்வழிகளைத் தண்டிக்க முழு உரிமை வேண்டும். எம்.எல். ஏக்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு எந்த ஒரு போலீஸ் அதிகாரியையும் டிரான்ஸ்பர் செய்யக் கூடாது! இப்படிப்பட்ட கோரிக்கைகளோடு முதலமைச்சரைச் சந்தித்து மனு கொடுக்கப் போகிறோம்...''

''எக்ஸ் மினிஸ்டர் இராஜாங்கம் சிறைச்சாலை செல்லில் வைத்தே இதயத்துக்குள் நீளமான ஊசியை சொருகி கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதேபோல் உதவி போலீஸ் கமிஷனர் டேனியல் மாணிக்கமும் போலீஸ் ஜீப்பிலேயே கடத்தப்பட்டு இதயத்தில் ஒட்டை போடப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கார். இந்தக் கொலைகளுக்குக் காரணமானவர்கள் யாராக இருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்...?''

சிறை ஐ.ஜி. ஈஸ்வர் கோபத்தில் முகம் சிவக்க
கத்தினார்.

''அது யாராக இருந்தாலும் சரி... எந்த
கொம்பனாக இருந்தாலும் சரி... இன்னும் இரண்டு
நாட்களில் கண்டுபிடித்து விடுவோம்... நாளை
கழித்து மறுநாள் பத்திரிகை நிருபர்களான நீங்கள்
எல்லோரும் இதே இடத்துக்கு, இதே நேரத்துக்கு
இங்கே வாருங்கள், கொலையாளியை நீங்கள்
பார்க்கலாம்.''

''காணாமல் போய்விட்ட பெண் பத்திரிகை
நிருபர் அருணாவைக் கண்டுபிடிக்க போலீஸ்
இதுவரைக்கும் என்ன நடவடிக்கைகளை
எடுத்துள்ளது..,?''

''அருணாவைக் கண்டுபிடிக்க 'போலீஸ்
ஸ்க்வாட் ஒண்ணைப் போட்டிருக்கோம். அவங்க
அருணாவைத் தேடிக்கிட்டு இருக்காங்க...''

''அருணா கொலை செய்யப்பட்டிருக்க
லாம்ன்னு சில பத்திரிகைகளில் செய்தி
வந்திருக்கே?''

''அருணா பற்றிய எந்த செய்தியும்
இதுவரைக்கும் கிடைக்காததால் அந்த செய்தியில்
உண்மை இருக்கவும் வாய்ப்பு இருக்கு.
அருணாவுக்கு ஆளும் கட்சியில் மட்டும் அல்ல
எதிர்க்கட்சியிலும் கணிசமான எதிரிகள்
இருக்காங்கங்கிற உண்மை இப்போ வெளியே
வந்திருக்கு.''

## 12



மறுநாள் காலை பத்தரை மணி.



ஈஸ்வர், இராஜாங்கம் சம்பந்தப்பட்ட ஒரு
பழைய ஃபைலைப் புரட்டிப் பார்த்துக்
கொண்டிருந்தபோது உதவியாளர் உள்ளே வந்தார்.
அவர் கையில் ஒரு கடித கவர்.

''ஸார்...''

''என்ன சண்முகம்...?''

''உங்க பேர்க்கு ஒரு தபால் வந்திருக்கு
ஸார்...''

''வெச்சுட்டு போ...''

உதவியாளர் கடித கவரை மேஜையின் மேல்
வைத்து அதன் மேல் பேப்பர் வெயிட்டை
வைத்துவிட்டு நகர்ந்தார். ஈஸ்வர் ஒரு ஐந்து
நிமிஷ நேரம் ஃபைலைப் பார்த்துக் கொண்டிருந்து
விட்டு அந்தக் கடிதத்தை எடுத்தார்.

ஃப்ரம் அட்ரஸைப் பார்த்தார். பெயர் எதுவு
மில்லை. டூ அட்ரஸில் கொட்டை கொட்டையான
எழுத்தில்,

திரு.ஈஸ்வர்,
சிறை ஐ.ஜி. அவர்கள்,
மத்தியச் சிறைச்சாலை,
சென்னை.

— என்று எழுதப்பட்டு இருந்தது.

கடித கவரைப் பிரித்தார்.

உள்ளே நான்காய் மடிக்கப்பட்ட ஒரு
வெள்ளைத்தாள். மடிப்புகளை விரித்தார்.

பாதிக் கடிதம் பென்ஸிலாலும், மீதிக் கடிதம்
பால் பாயிண்ட் பேனாவாலும் எழுதப்பட்டு
இருந்தது.

உயர் திரு சிறை ஐ.ஜி. ஈஸ்வர் அவர்களுக்கு
வணக்கம்.

பத்திரிகை நிருபர்களுக்கு தாங்கள் பேட்டி கொடுத்ததைப் பத்திரிகையில் பார்த்தேன். டி.வி.யிலும் பார்த்தேன். பெண் ரிப்போர்ட்டர் அருணாவைக் கண்டுபிடிக்க போலீஸ் ஸ்க்வாட் அமைக்கப்பட்டு இருப்பதாக சொன்னீர்கள். அந்த ஸ்க்வாடை வேறு வேலை பார்க்கும்படி சொல்வது உத்தமம். ஏனென்றால் அருணா இப்போது உயிரோடு இல்லை. அவள் பரங்கிமலை கல்க்வாரியில் பதினைந்து அடி ஆழத்தில் புதைக்கப் பட்டுவிட்டாள். அவளை அப்படி புதைத்தது வேறுயாரும் இல்லை.

உங்களுக்குக் கீழே பணிபுரியும் ஜெயிலர் உபயதுல்லாவும் வார்டன் சண்முகராஜனும்தான். யார் என்ன தப்பு செய்தாலும் அவர்களைக் கைது செய்து கோர்ட்டில் நிறுத்தி சட்டபூர்வமாகத்தான் தண்டிக்க வேண்டும் என்று பத்திரிகை நிருபர் களிடம் சொன்னீர்கள். அருணாவைக் கொலை செய்தவர்கள் யார் என்பதை இந்தக் கடிதம் மூலமாக உங்களிடம் சொல்லிவிட்டேன். உங்களுக்கு ஒரு வாரம் அவகாசம். அந்த இரண்டு பேரையும் சட்டப்படி கைது செய்து கோர்ட்டுக்குக் கொண்டு போக வேண்டும்.

இந்த ஒரு வார அவகாசத்தில் நீங்கள் இதை செய்யவில்லையென்றால் இன்றிலிருந்து எட்டாவது நாள் ஜெயிலர் உபயதுல்லாவும் வார்டன் சண்முக ராஜனும் உயிரோடு இருக்கமாட்டார்கள். இராஜாங்கமும், டேனியல் மாணிக்கமும் எப்படி இதயங்களில் ஓட்டை போடப்பட்டு சாகடிக்கப் பட்டார்களோ அதேபோல் அவர்களும் சாகடிக்கப் படுவார்கள்.

போனஸ் எச்சரிக்கை: இனிமேலாவது சிறை நிர்வாகமும் போலீஸ் நிர்வாகமும் சிறப்பாக செயல்பட வேண்டும் தப்பு செய்பவர்கள் எந்தத்



றையில் இருந்தாலும் எனக்குப் பிடிக்காது. ற டிக்கெட்டை செல்லாது என்று அறிவிக்க ந்த டிக்கெட்டின் நடுவில் ஒரு ஓட்டை ாடுவார்கள். அதேபோல தப்பு செய்தவர்களின் தயங்களில் நான் ஓட்டை போட்டு தண்டிக்க நவேன். உங்க பேரும் என்னோட ஹிட்லிஸ்ட்ல ருக்கு!

இப்படிக்கு

தமிழ்நாட்டின் தலைவிதி.

கடிதத்தை படித்து முடித்த ஈஸ்வர் கைகள் நுங்க இண்டர்காமைத் தொட்டு ரிஸீவரை டுத்தார்.

பட்டனைத் தட்டிவிட்டு கேட்டார்.

''உபயதுல்லாவா?''

''ஆமா ஸார்...''

''வார்டன் சண்முகராஜன் பக்கத்தில் ருக்காரா?''

''இருக்கார் ஸார்...''

''ரெண்டு பேரும் உடனே என்னோட ரூமுக்கு ாங்க.''

''இப்ப வர்றோம் ஸார்.''

ஈஸ்வர் ரிஸீவரை வைத்த ஒரு நிமிஷ நரத்துக்குள் உபயத்துல்லாவும் சண்முகராஜனும் விஷ்' பண்ணிக்கொண்டே உள்ளே வந்தார்கள்.

ஈஸ்வர் இரண்டு பேரையும் தன் கூர்மையான பார்வையால் அரை நிமிஷ நேரம் முறைத்துவிட்டு கேட்டார்.

''பெண் ரிப்போர்ட்டர் அருணா உயிரோடு இருக்க வாய்ப்பு இல்லைன்னு எல்லாப்

பத்திரிகைகாரர்களும் எழுத ஆரம்பிச்சுட்டாங்க இதைப்பத்தி நீங்க ரெண்டு பேரும் என் நினைக்கறீங்க?''

உபயதுல்லா முகத்தை பாவமாய் வைத்து கொண்டு சொன்னார். ''பத்திரிகைகாரங்க பத்திரி விக்கணும்ங்கிறதுக்காக எதை வேணும்னாலு எழுதுவாங்க ஸார்.''

''சரி... நீங்க... சொல்லுங்க... அந்த பொண்ணு உயிரோடு இருப்பாளா... மாட்டாளா...?''

''எங்களுக்கு எப்படி ஸார் தெரியும்...? அந்த பொண்ணை நாங்க பார்த்ததே கிடையாது.''

''சண்முகராஜன்! நீங்ககூட அந்த பெண்ணைப் பார்த்ததே கிடையாதா...?''

''பார்த்தது இல்லை ஸார்.''

''சரி... ரெண்டு பேரும் இந்த லெட்டரை படிங்க.''

பேப்பர் வெயிட்டுக்கு கீழே காற்றுக்கு படபடத்துக் கொண்டிருந்த அந்தக் கடிதத்தை எடுத்து ஈஸ்வர் நீட்ட இரண்டு பேரும் வாங்கி படித்துவிட்டு முகங்கள் இருண்டார்கள்.

''ஸா...ஸார்...''

''என்ன சொல்றீங்க...?''

''இந்த லெட்டரில் சொல்லப்பட்டிருக்கிற அத்தனை விஷயங்களும் பொய் ஸார்...''

ஈஸ்வர் நாற்காலியைத் தள்ளிக்கொண்டு எழுந்தார். 'லெட்டர் வாசகங்கள் பொய்யாய் இருக்க முடியாதுன்னு நான் நினைக்கிறேன். ஏன்னா நாலைஞ்சு நாட்களுக்கு முன்னாடி கைதிகளைக் கூட்டிக்கிட்டு பரங்கிமலை கல் குவாரிக்கு நீங்க



ரெண்டு பேரும்தான் போயிருக்கீங்க. அன்னிக்கு மத்தியானத்திலிருந்துதான் அருணாவைக் காணோம். தமிழ்நாட்டின் தலைவிதி என்கிற பெயரில் லெட்டர் எழுதியிருக்கிற கொலையாளிக்கு இந்த விஷயம் எப்படியோ தெரிந்திருக்கு. உங்க ரெண்டு பேரோட உயிர்களுக்கும் எந்த ஆபத்தும் வரக்கூடாதுன்னு நீங்க நினைச்சா எனக்கு நீங்க ஒத்துழைப்பு கொடுக்கணும். கொலையாளி யார்ங்கிறதைக் கண்டுபிடிக்க இப்போ ஒரு வழி கிடைச்சிருக்கு.''

''ஸார்...! சத்தியமா அந்த அருணாவை நாங்க கொலை பண்ணலை. ராஜாங்கம் அய்யாவுக்கு போதை மருந்து வாங்கத்தான் கல் குவாரிக்குப் போனோம். அதுவும் உங்க அனுமதியோடு.''

ஈஸ்வர் தோள்களைக் குலுக்கி பெருமூச்சு விட்டார். ''ராஜாங்கம் விஷயத்துல நாம நிறைய தப்பு பண்ணிட்டோம். அது பொது நல விரும்பியான எவனோ ஒருத்தனுக்குப் பிடிக்கலை. இதயத்துல ஓட்டைப் போட்டு வேட்டையாட ஆரம்பிச்சுட்டான். என்னோட பேரும் அவனோட ஹிட் லிஸ்ட்ல இருக்கிறதாக சொல்லியிருக்கான். நம்ம மூணு பேரையும் அந்தக் கொலையாளி தீர்த்துக்கட்டறதுக்கு முன்னாடி நாம முந்திக்கணும்.''

''எ...எப்படி... ஸார்...?''

''நீங்க ரெண்டு பேரும் ஒரு பத்து நாளைக்கு மெடிக்கல் லீவு போட்டுட்டு ஏதாவது ஒரு பாதுகாப்பான இடத்துல போய் தங்கிக்குங்க. இது வெளியே பார்க்கும். தெரிய வேண்டாம்.''

''ஸார்...! நாங்க தங்கியிருக்கிற இடத்தை கொலையாளி மோப்பம் பிடிச்சுட்டான்னா...?''

''கண்டிப்பா மோப்பம் பிடிப்பான். அந்த இடத்துக்கு கொலையாளி வரவும் முயற்சி

பண்ணுவான். அப்படி அவன் முயற்சி பண்ணி
உங்க இடத்தைக் கண்காணிக்கிற போலீ
அவனை 'ரவுண்ட் அப்' பண்ணுவாங்க. போலீ
பிடியிலிருந்து அவன் தப்பிச்சுட்டுப் போ
எப்படியும் முயற்சி பண்ணுவான். அந்தச் சமயத்து
உங்க ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தர் தயக்
காட்டாமே அவனைச் சுட்டுத் தள்ளணும். அவ
உயிரோடு போலீஸில் மாட்டிக் கொள்ளக்கூடா
அப்படி மாட்டிக்கிட்டா நம்ம வண்டவா
முழுவதும் வெளியே வந்து பத்திரிகைகளிலு
டி.வி.க்களிலும் நாறிடும்.''

உபயதுல்லாவும் சண்முகராஜனும் ஒருத்த
யொருத்தர் பார்த்துக்கொண்டு முகம் வியர்த்தார்க

ஈஸ்வர் கேட்டார்.

''உங்க ரெண்டு பேர்க்கும் தெரிஞ்ச மாதி
ஏதாவது பாதுகாப்பான இடம் இருக்கா...?''

சண்முகராஜன் யோசித்து விட்டு சொன்னா

''வேளச்சேரி போற ரோட்டில் குட்டி பங்க
ஒண்ணு இருக்கு ஸார். அந்த பங்களாவுக்
சொந்தக்காரர் பேர் தாவூது. எனக்கு
உபயதுல்லாவுக்கும் அவர் நெருங்கின ஃப்ரண்
இப்போ அவர் துபாயில இருக்கார். காலியா
இருக்கிற பங்களாவை வாடகைக்கு விடச் சொல்
சாவியை எங்கிட்டதான் கொடுத்துட்டு
போயிருக்கார்.''

''ஸோ... அந்த வீடு இப்ப காலியாத்தா
இருக்கு.''

''ஆமா ஸார்...''

''அப்புறம் என்ன அந்த வீட்லயே போ
நீங்க ரெண்டு பேரும் தங்கிக்கலாமே... இந்



ஒரு வாரத்துல என்ன நடக்குதுன்னு
பார்த்துடலாம்...''

''ஸ...ஸார்...''

''இது ஏதாவது ஒரு விபரீதத்துல போய்
முடிஞ்சுடுமோன்னு பயமாயிருக்கு...''

''போலீஸ் படை நம்மகிட்டே இருக்கும்போது
பயம் எதுக்கு...? சில நேரங்களில் இப்படிப்பட்ட
துணிச்சலான முடிவுகளை எடுத்தாத்தான்
கொலையாளியைப் பிடிக்க முடியும். யானையைப்
பிடிக்க பள்ளத்தை தோண்டற மாதிரிதான்
இதுவும்...''

''நாங்க என்னிக்கு கிளம்பணும் ஸார்?''

''உங்க டூ வீலர் ரெண்டும் ஜெயிலிலேயே
இருக்கட்டும். ராத்திரி எட்டு மணிக்கு மேல்
சிறைச் சாலையின் பின்பக்க வாசல் வழியாக
வெளியேறி ஒரு ஆட்டோவோ டாக்ஸியோ பிடிச்சு
வேளச்சேரி பங்களாவுக்கு போயிருங்க... ரெண்டு
மணி நேரம் கழிச்சு நான் ஒரு வாரம் பத்து
நாளைக்கு தேவைப்படுகிற அளவுக்கு
வெஜிடபிள்ஸூம் மளிகை சாமான்களும் வாங்கிட்டு
வர்றேன். சண்முகராஜனுக்கு நல்லா சமைக்கத்
தெரியும். ஒரு வாரத்தை எப்படியோ ஓட்டிருங்க...
அதுக்குள்ளே கொலையாளியை மடக்கிடலாம்.''

''ஸார்...! போலீஸோட கண்காணிப்புக்கு?''

''நான் ஏற்பாடு பண்ணிடறேன். டி.ஜி.பி.
கிட்டே பேசி நான் ஸ்பெஷல் பர்மிஷன்
வாங்கிடறேன்.''

''அந்தக் கொலையாளி நம்ம கைக்கு
மாட்டுவானா ஸார்...?''

''வலையை விரிச்சுவைப்போம்.''

# 13



ராத்திரி எட்டரை மணி நியூஸை டி.வி.யி... கேட்டுக் கொண்டிருந்த ஆடலரசு காலிங்பெ... அலறும் சத்தம் கேட்டு எழுந்து போய்க் கதவை... திறந்தார்.

அருணாவின் அண்ணன் விக்னேஷ் கலை... தலையும் சவரம் செய்யப்படாத தாடையுமா... நின்றிருந்தான்.

''வா... விக்னேஷ்...''

உள்ளே இயந்திரமாய் நடந்து வந்... நாற்காலிக்குச் சாய்ந்தான். தழுதழுத்த குரலி... கேட்டான்.

''போலீஸ்கிட்டயிருந்து அருணாவைப் பத்... ஏதாவது தகவல் வந்ததா ஸார்...?''

''இல்லை... விக்னேஷ்... பத்து நிமிஷத்துக்... முன்னாடி கூட டி.ஜி.பி.கிட்டே பேசிப் பார்த்தே... அருணாவைப் பத்தி ஒரு தகவலும் கிடை... கலைன்னு சொன்னார்...''

''ஸார்...! இந்த போலீஸ்காரங்கதான் ஏதோ... பண்ணிட்டாங்க...''

''என்னோட சந்தேகம் வேற விக்னேஷ்''

''என்ன ஸார்...?''

''பரங்கிமலை கல்க்வாரிக்கு வாரா வார... கைதிகளைக் கூட்டிகிட்டு ஜெயிலர் உப... துல்லாவும், வார்டன் சண்முகராஜனும் போற... வழக்கம். அங்கே ஏதோ தப்பு நடக்குத... அதைக்கண்டு பிடிக்கணும்'ன்னு அருணா அடிக்க... சொல்லுவா. அங்கே போய் ஒரு வேலை...



மாட்டிக்கிட்டாளோ என்னவோ... இதை நான் வெளிப்படையா சொன்னா நிறைய பிரச்சனைகள் வரும்.''

''ஸார்...! எனக்கு வர்ற ஆத்திரத்தில் ஒரு துப்பாக்கியை எடுத்துட்டுப் போய் சந்தேகப்படற எல்லாரையுமே சுட்டுத் தள்ளணும்போல் இருக்கு. இன்னும் ரெண்டு நாள் பார்ப்பேன். அருணா வரலைன்னா அதைத்தான் பண்ணப் போறேன்.''

''பொறுமையா இரு விக்னேஷ்... எனக்கும் மனசுக்குள்ளே கோபம் இருக்கு. அந்தக் கோபத்தை செயலில் காட்டாமே எழுத்தில் தான் காட்டணும்...''

டெலிபோன் மணியடித்தது.

எழுந்து போய் ரிஸீவரை எடுத்தார். மறுமுனையில் டி.ஜி.பி. குலசேகரன் பேசினார்.

''மிஸ்டர் ஆடலரசு...''

''சொல்லுங்க ஸார்...''

''உங்க பத்திரிகை ஆபீஸில் வெடிகுண்டு வைக்கச் சொன்னது யார்ன்னு இப்போ தெரிஞ்சு போச்சு. அந்த நபரைக் கைது செய்ய போலீஸ் போயிருக்கு.''

''யார் ஸார்... அந்த புண்ணியவான்...''

''உங்களுக்குப் போட்டியாய் மார்க்கெட்டில் இருக்கிற 'வாள்முனை' பத்திரிகையின் ஆசிரியர் நாகப்பன். உங்க பத்திரிகையின் வளர்ச்சியையும் விற்பனையையும் பார்த்து பொறாமைப்பட்ட நாகப்பன் ஜெயில்ல இருந்த இராஜாங்கத்துகிட்டே யோசனை கேட்க அவர் போட்டுக் கொடுத்த திட்டம். உங்க பத்திரிகையின் உதவியாசிரியர் கமலப்பித்தனை அதுக்காக பயன்படுத்தியிருக்காங்க...''

"ஸார்... என்னோட கவலையெல்லாம் இப் பத்திரிகையைப் பத்தி கிடையாது. அருணாவை பத்தி...! அருணாவைக் கண்டுபிடிக்க ஏதாவது புது முயற்சிகள் போலீஸ் தரப்பிலிருந்து எடுக்கப்பட்டிருக்கா ஸார்...?"

"தேடுதலை தீவிரப்படுத்தியிருக்கோம்... தைரியமாய் இருங்க ஆடலரசு. அருணாவையும் எப்படியும் கண்டுபிடிச்சு கொடுத்துருவோம்..."

"உங்ககிட்டேயிருந்து அப்படியொரு நல் பதில் வரும்ன்னுதான் ஒவ்வொரு நிமிஷத்தையும் நகர்த்திக்கிட்டிருக்கேன் ஸார். அருணாவோட ப்ரத விக்னேஷ் தங்கை காணாமே போன விஷயத்தில் ரொம்பவே மனசு உடைஞ்சு போய்ட்டார்."

"அவரையும் தைரியமா இருக்கச் சொல்லுங்க நாகப்பன் கைது விஷயமா நாளைக்குக் காலையில் நீங்க போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் வரவேண்டியிருக்கும்...."

"வர்றேன் ஸார்..."

ஆடலரசு ரிஸீவரை வைத்துவிட்டு விக்னேஷிடம் திரும்பினார். "டி.ஜி.பி. ரொம்பவும் நல்ல டைப். போலீஸ் டிபார்ட்மெண்டில் இப்படிப்பட்ட நல்ல அதிகாரிகளும் இருக்காங்க..."

"எல்லாம் வேஷம் ஸார்..."

"அப்படி சொல்லாதே... விக்னேஷ்... இவ அப்படிப்பட்டவர் இல்லை..."

ஆடலரசு சொல்லிக் கொண்டிருக்கும்போதே வெளியே காலிங் பெல் 'ப்ர்ர்ர்ர்ர்'ரென்று கூப்பிட்டது.

"இந்நேரத்துக்கு யார்ன்னு தெரியலையே?"

ஆடலரசு யோசனையாய் தாடையைத் தேய்க்க விக்னேஷ் எழுந்து போய்க் கதவைத் திறந்தான்.



வெளியே –

அருணா.



## 14

வேளச்சேரி.

மரங்களுக்கு நடுவில் உட்கார்ந்திருந்த அந்த குட்டி பங்களாவில் ஜன்னல்களையும் கதவையும் அடைத்துவிட்டு படுக்கையறைக்குள் இருந்தார்கள் உபயதுல்லாவும் சண்முகராஜனும். டி.வி. திரையில் ஒரு ப்ளு ஃபிலிம் சத்தம் இல்லாமல் ஓடிக் கொண்டிருக்க – டீபாயின் மேல் ஸ்காட்ச் பாட்டிலும் டம்ளர்களும் தெரிந்தன.

"உபை...!" கண்களில் போதையோடு கூப்பிட்டார் சண்முகராஜன்.

"ம்...!"

"அந்த ரிப்போர்ட்டர் பொண்ணு அருணாவ்வ நாம கல்லுக் குழியில் போட்டதை யாரோ பார்த்துட்டாங்க."

"யார் பார்த்திருப்பாங்க...?"

"கல்க்வாரியில் வேலை பார்த்துட்டிருந்த அந்த ஐம்பத்தியொரு கைதிகளில் யாராவது பார்த்து இருப்பாங்களா?"

"எனக்கும் அந்த சந்தேகம்தான்...! கைதிகளில் எவனாவது பார்த்துட்டு வெளியே தகவல் கொடுத்து இருப்பானோ?"

"எவ்வளவுதான் ஜாக்கிரதையா காரியத்தைப் பண்ணினாலும் ஏதாவது ஒரு இடத்துல ஸ்லிப் ஆயிடறோம்..."

''பீங்க்....''

பங்களாவுக்கு வெளியே காம்பௌண்ட் கேட்டுக்குப் பக்கத்தில் காரின் ஹார்ன் சத்தம் கேட்டது.

உபயதுல்லா குடித்துக் கொண்டிருந்த டம்ளரை அப்படியே கீழே வைத்துவிட்டு எழுந்து வெளியே வந்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார்.

ஈஸ்வரின் வெள்ளை நிற அம்பாஸிடர் கார் தெரிந்தது.

''சண்முகம்! போய்க் கதவைத் திற... ஐ.ஜி. வந்துட்டார்...''

சண்முகராஜன் வேகவேகமாய் நடைபோட்டு வெளியே வந்து வாசல் கதவையும், பின் காம்பௌண்ட் கேட்டையும் திறந்துவிட கார் உள்ளே வந்து போர்டிகோவில் நின்றது.

ஐ.ஜி. ஈஸ்வரும் ஜெயில் சூப்பரின்டெண்டெண்ட் இன்பமணியும் காரினின்றும் இறங்கி உள்ளே வந்தார்கள். உபயதுல்லாவும் சண்முகராஜனும் போதை தெளிந்து விஷ் செய்தார்கள்.

ஈஸ்வர் சிரித்தார். ''என்ன... இப்படி மணக்குது.... ஸ்காட்ச்சா...?''

''ஆமா... ஸார்...''

''மிச்சம் மீதி ஏதாவது இருக்கா... இல்லை காலி பாட்டில்தானா...?''

''ஃபுல் பாட்டிலே இருக்கு ஸார். எல்லாம் செத்துப்போன இராஜாங்கம் ஸாரோட கருணை மழை....''

''போய் பாட்டிலைக் கொண்டா! மொதல்ல ஒரு ரவுண்ட் போட்டுட்டு பேசுவோம்.''



உபயதுல்லா உள்ளறைக்கு ஓடிப்போய் ஒரு புது பாட்டிலோட ஓடி வந்தார். இன்பமணி பாட்டிலை வாங்கி அதைத் திறக்க முயற்சிக்க

சண்முகராஜன் ஈஸ்வரிடம் கேட்டார்.

''ஸார்! மளிகை சாமான்களும் காய்கறிகளும் கொண்டுட்டு வர்றதா சொன்னீங்களே...?''

''அதை மறப்பேனா...?'' சொன்னவர் வெளியே பார்த்து குரல் கொடுத்தார்.

''டிரைவர்...''

''அய்யா...!'' அந்த டிரைவர் உள்ளே எட்டிப் பார்த்து குரல் கொடுத்தார்.

''அந்த மளிகை சாமானையெல்லாம் கொண்டு வந்து உள்ளே வை...''

''இதோ...'' சொன்ன டிரைவர் நிமிஷ நேரம் கழித்து உள்ளே வந்தார்.

கையில் ஊதுவத்தி பாக்கெட் சைஸில் ஒரு ப்ளாஸ்டிக் டப்பி.

அதை டீபாயின்மேல் வைத்துவிட்டு டிரைவர் தள்ளி நிற்க உபயதுல்லா புன்னகையோடு கேட்டார்.

''என்ன ஸார் இது...! மளிகை சாமான்களை கொண்டுட்டு வரச்சொன்னா டிரைவர் இதைக் கொண்டாந்து வெச்சிட்டாரு...! என்ன இது...?''

ஈஸ்வர் அந்த நீளமான பிளாஸ்டிக் டப்பியை எடுத்து அதன் தலை மேல் இருந்த ஒரு பட்டனை அழுத்த அது 'ப்ளக்'என்று திறந்து கொண்டது.

உள்ளே –

பளபளக்கும் உடம்போடு ஒரு அடி நீளத்தில் அந்த மெல்லிய ஊசி படுத்து இருந்தது.

## 15



அருணாவைப் பார்த்ததும் விக்னேஷுக்கும் ஆடலரசுக்கும் சில விநாடிகள் மூச்சடைத்துப் போயிற்று.

''அ....அ...அருணா... உனக்கு என்னாச்சு? இத்தனை நாளா எங்கே போயிருந்தே...?'' ஆடலரசு கேட்க அருணா முகம் இறுகிப் போனவளாய் உள்ளே மெல்ல நடந்து வந்து சோபாவுக்கு சாய்ந்தாள். கழுத்தில் லேசாய் வியர்வையின் மினுமினுப்பு.

ஆடலரசை கண்களில் நீரோடு பார்த்தாள். ''ஸார்...! என்னோட ஃப்ரண்ட் லாராவை அநியாயத்துக்கு இழந்துட்டேன்.''

''நீ என்னம்மா சொல்றே...?''

''ஸார்... நாலைஞ்சு நாளைக்கு முன்னால் நான் பரங்கி மலை போறதுக்காக நம்ம ஆபீஸை விட்டு வெளியே வந்தேன். அப்பத்தான் லாராவைப் பார்த்தேன். லாராவும் ப்ரீலான்ஸரா ரிப்போர்ட்டர் வேலை பார்க்கிற விஷயம் உங்களுக்குத் தெரியும். நானும் அவளும் பார்த்து ரொம்ப நாளானதால் பக்கத்தில் இருக்கிற ரெஸ்டாரெண்ட்டுக்குப் போய் டீ சாப்பிட்டோம். அப்பத்தான் என்னோட செல் போன்ல ஒரு கால் வந்தது. என்னோட அண்ணன் விக்னேஷ் குரலில் யாரோ பேசியதைக் கேட்டு ஏமாந்து போய்ட்டேன்.''

''போன்ல என்ன பேசினாங்க...?''

''அண்ணன் தனக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லி மனோரஞ்சிதா ஹாஸ்பிட்டல்ல கொஞ்ச



...த்துல அட்மிட் ஆகப் போறதாக சொன்னார். ...ல் அச்சாய் அண்ணன் மாதிரியே இருந்ததால் ...த்து போய் புறப்படத் தயாரானேன். லாரா ...ரு ப்ரஸ் ரிப்போர்ட்டரா இருந்ததால, ...ங்கிமலைக்குப் போய் நான் பார்க்க வேண்டிய ...வலையை அவ பார்க்கப் போறதா சொன்னா. ...ன் வேண்டாம்ன்னு எவ்வளவு சொல்லியும் லாரா ...ட்கலை. என்னோட கேமிராவையும் அவசரத்துல ...ன்னோட வேனிடி பாக்கையும் எடுத்துக்கிட்டு ...பாய்ட்டா. அவ எப்பவுமே அட்வென்ச்சர் டைப்பில் ...தையாவது பண்ணத் துடிக்கிறவள்.''

விக்னேஷ் பதட்டமாய்க் குறுக்கிட்டான்.

''சரி... மனோரஞ்சிதா ஹாஸ்பிட்டல்ல உனக்கு ...ன்ன ஆபத்து ஏற்பட்டது...?''

''நான் லாராகிட்டே சொல்லிட்டு ரெஸ்டா...ரண்டை விட்டு வெளியே வந்தேன். ஒரு காலி ...ட்டோ தயாரா நின்னுட்டிருந்தது. அதுல ...றிகிட்டு ஹாஸ்பிட்டல் போகச் சொன்னேன். ...ாஸ்பிட்டல் அவுட்டர்ல இருந்ததால போகிற ...ழியில் ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் ...டீர்ன்னு ஆட்டோ நின்னது. பக்கத்திலேயே ஒரு ...வேன். நான் என்ன ஏதுன்னு யோசனை ...ண்றதுக்குள்ளேயே அந்த வேனிலிருந்து ...ாலைஞ்சு பேர் திபுதிபுன்னு இறங்கினாங்க. ஒருத்தன் மயக்க மருந்து ஸ்ப்ரே பண்ணின ...ர்சீஃபால என் முகத்தைப் பொத்தினான். மத்தவங்க என்னைத் தூக்கினாங்க. அவ்வளவுதான் எனக்குத் தெரியும். கண் முழிச்சுப் பார்க்கும்போது ஒரு இருட்டான அறைக்குள்ளே கட்டிலில் படுத்து இருந்தேன். கொஞ்ச நேரம் போனதும் ஒரு ஆணும் பெண்ணும் நான் இருந்த ரூமுக்குள்ளே வந்தாங்க. என்னை எழுப்பி உட்கார வெச்சு சில

பேப்பர்ஸைக் காட்டி கையெழுத்து போ
சொன்னாங்க. 'அது என்ன பேப்பர்ஸ்'ன்னு நா
கேட்டேன். 'அதை உனக்கு சொல்ல வேண்டி
இல்லை. கையெழுத்து போடு'ன்னு மிரட்டினாங்
. நான் போட மாட்டேன்னு அடம்பிடிக்க
கண்ணுமண்ணு தெரியாமே அடிச்சாங்க. மறுபடி
நான் மயக்க மாயிட்டேன்.''

''அது என்ன பேப்பர்ஸ்?''

''அதுக்கப்புறம் தான் எனக்குத் தெரிஞ்சது.
நான் பாதி மயக்கத்துல இருக்கும்போது அவ
பேசிகிட்டது என் காதுல விழுந்தது. இ
அரசாங்கத்துக்கு எதிராக நான் ரெண்டு பொது
வழக்குகளைப் போட்டிருந்தேன். அந்த ரெண்
பொது நல வழக்குகளும் அடுத்த மா
பதினோராம் தேதி ஐகோர்ட்டில் விசாரணைக்
எடுத்துக்க இருக்காங்க. இந்த நிலைமை
அந்த வழக்குகளை நான் வாபஸ் பெறணும்ங்கி
துக்காக பேப்பர்ஸ்ல கையெழுத்து போட
சொல்லியிருக்காங்க. என்கிட்டே கையெழு
துக்களை வாங்கிட்ட பிறகு என்னோட மனநி
பாதிக்கிற மாதிரி ஊசிகளைப் போடவும் திட்ட
போட்டிருந்தாங்க. என்கிட்ட கையெழுத்து வாங்
எப்படி எப்படியெல்லாமோ முயற்சி பண்ணி
பார்த்தாங்க. நான் அசைஞ்சு கொடுக்கலை
கடைசியில் நேத்து ராத்திரி என்னைத் தீர்த்து
கட்டுகிற முடிவோடு என்னை மயக்கப்படுத்
ஒரு வேன்ல ஏத்திகிட்டு ஆந்திரா பார்டர்க்கு
போனாங்க. வேன் ராத்திரி ஒரு மணி சுமார்க்
ஒரு லெவல் க்ராஸிங்கில் நின்னுட்டிருந்தபோ
ஆந்திரா போலீஸார் வாகனங்களை சோதனை
போட வந்தாங்க. போலீஸார் கண்ணுல நா
பட்டுடக் கூடாதுங்கிறதுக்காக அரை மயக்கத்தி



என்னை வேனிலிருந்து கீழே இறக்கி
ஓரத்தில் இருந்த ஒரு புதர்க்குப் பின்னாடி
வெச்சாங்க. போலீஸார் வந்து அவங்களை
ரணை பண்ணினபோது முன்னுக்குப் பின்
பதில் சொல்லவும் போலீஸ் சந்தேகப்பட்டு
லா போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு
மிட்டாங்க. புதர்க்குப் பின்னாடி அரை
க்கத்தில் இருந்த எனக்கு லேசா உணர்வு
ந்ததே தவிர அசைய முடியலை. வாயைத்
ந்து கத்த முடியலை. விடிகாலை நான்கு
ரிக்குத்தான் என்னால் எந்திரிக்க முடிஞ்சுது.
கத்திலேயே ஏதோ ரயில்வே ஸ்டேஷன்
ரியவும் மெல்ல நடந்து போய் ப்ளாட்பாரத்தில்
மிட் பண்ணி ஒரு பாசஞ்சர் ரயிலில் ஏறி
ன்னை வந்தேன்.''

''போலீஸில் உடனே சொல்லியிருக்கலாமே?''

''போலீஸை நம்ப பயமாயிருந்தது.
ணலிக்குத் தப்பி அடுப்புல விழுந்த கதை
யிடுமோனு பயந்து யார்கிட்டேயும் எந்த
வியும் கேட்காமே நானே வந்தேன்.''

''உன்னைக் கடத்தின அந்த ஆட்கள் யார்ன்னு
ரிஞ்சுதா அருணா...?'' விக்னேஷ் கோபமாய்க்
ட்டான்.

''ஓரளவுக்கு கெஸ் பண்ணிட்டேன்...''

''யாரு...?''

''கல்வி அமைச்சர் பத்ராச்சலத்துக்கு
மண்டூர்ல ஒரு சின்ன வீடு இருக்கு. அவ
ரு ஹேமாவதி. அந்த ஹேமாவதியும் அவளோட
ண்ணன் வெங்கட்ரமணாவும்தான்... இதுக்
கல்லாம் காரணம். அரசாங்கத்துக்கு எதிராக
கார்ட்ல யார் பொது நல வழக்கு போட்டாலும்
ரி அவங்களுக்கு எதிரா இவங்க செயல்படுவாங்க.

நம்ம 'கவசம்' பத்திரிகையிலேயும் இவங்க
பத்தி ஒரு கட்டுரை எழுதியிருக்கேன்.''

விக்னேஷ் படபடத்தான்.

''இந்த விஷயத்தை உடனடியா போலீஸ
கொண்டு போகணும்....''

''வேண்டாம்ண்ணா...! இப்ப இருக்
போலீஸ் டிப்பார்ட்மெண்டில் யாரையும்
முடியாது. அதுவுமில்லாம என்னைக் கடத்திட்
போனது அந்த ஹேமாவதியும் வெ
ரமணாவும்தான்னு நிச்சயமா எனக்குத் தெரிய
எல்லாமே ஒரு டீம் வொர்க்தான். என்
கடத்திகிட்டு போனவங்க என்கிட்டே பேசும்
முகங்களைக் காட்டாமதான் பேசினாங்க.''

''போலீஸ்ல புகார் பண்ணாமே இரு
முடியாது. அருணா! ஏன்னா நீ காணாம
விஷயம் சட்டசபை வரைக்கும் போயிருக்

''வேணும்ன்னா... இப்படி புகார் கொடு
வைக்கலாம்ண்ணா...''

''எப்படி...?''

''ஏதோ ஒரு கும்பல் என்னைக் கடத்திகி
போய் ரூம்ல அடைச்சு வெச்சுகிட்டு ஒரு ம
அமைச்சரின் ஊழல் சம்பந்தப்பட்ட விபரங்கள
கேட்டாங்க. எனக்கு தெரியாதுன்னு சொல்லி
கேட்கலை. நாலு நாள் சித்திரவதை பண்ணினா
அஞ்சாவது நாள் ராத்திரி அவங்க ஒரு வே
என்னை ஆந்திராவுக்கு கொண்டு
முயன்றபோது வழியில் தப்பிச்சுட்டேன்.''

ஆடலரசு குறுக்கிட்டுச் சொன்னார். ''அரு
சொல்றதுதான் சரி விக்னேஷ்...! இப்போதை
நமக்கு உண்மை தெரிஞ்சாலும் யாரையும் காட்



காடுக்கக் கூடாது. நாமும் மௌனமா
ருந்துகிட்டுத்தான் காரியங்களை சாதிக்கணும்.''

''பரங்கிமலைக்குப் போன லாராவுக்கு என்ன
நேர்ந்ததுன்னு தெரியலையே ஸார்...''

''அதையும் இனிமேல் கண்டுபிடிப்போம்.''

''லாரா பாவம் ஸார்... ஒண்டிக்கட்டை.
பேமிலி கிடையாது. அடையாறுல ஒரு வீடு
டுத்து தங்கியிருந்தா. அவ உயிரோடு
ருந்தாலும் இல்லைன்னாலும் அதைப் பற்றி
தோஷப்படவோ கவலைப்படவோ யாரும்
டையாது.'' சொன்ன அருணாவின் கண்களில்
கட்டிக் கொண்டு பளபளத்தது.

# 16



ஒரு அடி நீளத்தில் பளபளக்கிற உடம்போடு
தரிந்த ஊசியைப் பார்த்ததும் உபயதுல்லாவும்
ண்முகராஜனும் துல்லியமாய் மிரண்டு போய்
.ஜி. ஈஸ்வரைப் பார்த்தார்கள்.

''எ...எ....என்ன ஸார் இது...?''

''பார்த்தா தெரியலை...? ஊசி...''

''இது... இது... எதுக்கு... ஸார்...?''

''உங்க ரெண்டு பேர்க்கும் வழி காட்ட
ந்திருக்கு...! சுடுகாட்டுக்கு எப்படி போறதுன்னு
வழி தெரியாமே இருக்கிறவங்களுக்கு இந்த
ஊசிதான் வழிகாட்டி...''

உபயதுல்லாவும் சண்முகராஜனும் ஸ்தம்பித்த
விழிகளோட பின்வாங்க – அவர்களுக்குப் பின்னால்
நின்றிருந்த ஜெயில் சூப்பரிண்டெண்டெண்ட்
இன்பமணியும் டிரைவரும் அவர்களுடைய

தோள்பட்டைகளைக் 'கப்'பென்று
கொண்டார்கள்.

இருவரும் திமிற – ஈஸ்வர் புன்னகை
''ஜெயிலுக்குள்ளே ஒரு ராஜா மாதிரி இ
இராஜாங்கமும், காக்கி யூனிஃபார்ம் போட்டு
சட்டத்துக்குப் புறம்பான வேலைகளைப் ப
கிட்டு இருந்த உதவி போலீஸ் கமிஷனர் டே
மாணிக்கமும் இந்த ஊசியால்தான் சுடுகாட்
வழி காட்டப்பட்டவங்க. இரண்டு பே
இதயத்துக்குள்ளேயும் ஆழமாய் இறங்கி ரத்த
ருசி பார்த்த இந்த ஊசி இப்போ உங்களு
இருதயங்களிலும் இறங்கி ருசி பார்க்கப் பே
இந்த தண்டனை எதுக்காகன்னு உங்க ரெ
பேர்க்கும் நல்லாவே தெரியும்.''

சண்முகராஜன் மரணபீதி நிரம்பிய முகத்
கைகள் நடுங்க கும்பிட்டார்.

''ஸார்...! அ...அ...அந்த ரிப்போர்ட்டர்
பொண்ணு அ...அ...அருணாவை ஓ...
ஒன்னும் பண்ண வேண்டாம்ன்னு
சொன்னேன். உபயதுல்லாதான் கேட்கலை

உபயதுல்லா கோபமாய் அழுகைக் கு
இடைமறித்தார். ''அந்தப்... பொ... பொ
அருணாவோட கழுத்தைப் பிடிச்சு நெரி
இந்த ஆள்தான் ஸார்.''

ஈஸ்வர் ப்ளாஸ்டிக் பெட்டியில் இருந்த
ஊசியை கையில் எடுத்துக் கொண்டே சிரித்
''நீங்க ரெண்டு பேரும் பார்ட்னர்க
இருந்து கொலையைப் பண்ணியது
அருணாவை அல்ல. லாராங்கிற பொண்
அந்தப் பொண்ணும் பத்திரிகை ரிப்போர்ட்டர்தா



அவர்கள் திகைத்து திணறிக் கொண்டிருக்க
இன்பமணி இப்போது பேச்சைத் தொடர்ந்தார்.
''உங்க ரெண்டு பேரோட நடவடிக்கைகளை
மட்டும் அல்ல போலீஸ் டிபார்ட்மெண்டிலும்,
அரசியல் துறையிலும், நீதித்துறையிலும் உள்ள
எல்லா கறுப்பு ஆடுகளின் நடவடிக்கைகளையும்
உன்னிப்பா கவனிச்சு அவங்களை யெல்லாம்
ஹிட்லிஸ்ட் பண்ணி ஒவ்வொர்த்தர்க்கும் கபால
மோட்சம் காட்றதுதான் எங்க வேலை. தீய
சக்திகளை நேர்க்கு நேர் எதிர் கொள்கிற
மனவலிமையோ பணபலமோ எங்க மூணு பேர்க்கும்
கிடையாது. அதனால அந்த தீய சக்திகளுக்கு
உதவற மாதிரி நடிச்சு அதுக்கப்புறம் ஒரு நல்ல
நாள் பார்த்து அழிக்கிற வேலையை பண்ணிட்டு
வர்றோம். அந்த நல்ல நாள் இன்னிக்க உங்களுக்கு
வந்திருக்கு.''

உபயதுல்லாவும் சண்முகராஜனும் வியர்த்து
வழித்தார்கள்.

''விரோதிகளோடு உறவாடி அழிக்கிற இந்த
புனிதப் பணிக்கு முதல் பலி இராஜாங்கம்.
ரெண்டாவது பலி – டேனியல் மாணிக்கம்.
மூணாவது பலி உபயதுல்லா. நான்காவது பலி
சண்முகராஜன்.''

''வே...வே...வேண்டாம்... ஸார்...''
உபயதுல்லா கதறியழ, இன்பமணி சிரித்தார்.

''சரி...! மூனாவது பலி சண்முகராஜன்.
நான்காவது பலி உபயதுல்லா...! பட்டியல் இதோடு
முடியலை பார்ட்னர்ஸ்! உங்க ரெண்டு பேர்க்கும்
இன்னிக்கு வழிகாட்டிட்டு அடுத்த வாரம்
இன்னொரு மோசடி பார்ட்னர்களுக்கு வழிகாட்டப்
போறோம். அவங்க வேற யாரும் கிடையாது.
மாமண்டூரில் இருக்கிற ஹேமாவதியும் அவளோட
அண்ணன் வெங்கடரமணாவும்தான். தமிழ்நாட்டில

எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இவங்கவே
அராஜகத்தை தாங்கிக்க முடியாது. தமிழ்நாட்
உள்ள எல்லா தாதாக்களும் இவங்க கட்
பாட்டுக்குள்! மந்திரிகளின் பினாமி சொத்துக்க
பாதுகாக்கிற வேலையும் இவங்களோடதுதா
எத்தனையோ பைனான்ஸ் கம்பெனிகளை நட
பொது மக்களின் பணத்தை கோடிக் கணக்
சுருட்டிமிருக்காங்க. இவங்க பேர்ல எத்தனை
வழக்குகள் இருந்தாலும் லாக்கப்புக்குள்ளே
நாள் கூட இருந்தது இல்லை. ஸோ இ
சாக்கடைகளையும் சுத்தப்படுத்தப் போறோ
நாங்க மூணு பேரும் போலீஸில் அதா
எங்களுடைய உயர் அதிகாரிகளிடம் மாட்
கொள்ளாத வரையில் இந்தப் புனிதப்
தொடர்ந்து கொண்டிருக்கும்.''

ஈஸ்வர் கையில் ஊசியோடு எழுந்தார்.

''நீங்க ரெண்டு பேரும் பத்து நாள் மெடிக்
லீவு போட்டிருக்கீங்க. இங்கே இந்த வீட்
ரெண்டு பேரும் தங்கியிருக்கிற விஷ
எங்களைத் தவிர வேற யாருக்கும் தெரிய
அதேபோல் உங்க மரணமும் யார்க்கும் தெரி
போவதில்லை. லாராவை எந்தக் கல்லுக்குழி
போட்டு அடக்கம் பண்ணீங்களோ அ
கல்லுக்குழிக்குப் பக்கத்தில் இன்னும் ரெ
கல்லுக்குழிகளைப் பார்த்து வெச்சிருக்கே
அந்தக் குழிகள்தான் உங்களுக்கு நிரந்தர இ
உங்க ரெண்டு பேரையும் தொடர்ந்து இன்
சில தீய சக்திகள்... இந்த சமுதாயத்து
தேவைப்படாத குப்பைகள் அந்தக் கல்
குழிகளுக்கு வந்து சேரும்.''

உபயதுல்லாவும், சண்முகராஜனும் ம
பயத்தில் சிரமமாய் எச்சில் விழுங்கினார்கள்.



''இந்த மரணம் உங்களுக்கு வலிக்காது. டிரைவர்க்கு வர்மக்கலை தெரியும். நீங்க ரெண்டு பேரும் முரண்டு பிடிக்காமே அசையாமல் ஒரு நிமிஷ நேரம் நின்னுட்டிருந்தா போதும். டிரைவரோட வலது கை உங்க கழுத்தில் ஒரு கத்தி மாதிரி சாய்வா பாயும். கழுத்தில் அடிபட்டதுமே உங்க உடம்பின் மொத்த நரம்பு மண்டலமும் ஸ்தம்பிச்சு போக ரெண்டு மணி நேரத்துக்கு மரக்கட்டைகளாய் விழுந்து கிடப்பீங்க. அதுக்கப் புறம் தான் இந்த ஊசிக்கு வேலை. பார்க்கிறதுக்கு ரோமம் மாதிரி மெலிசாய் இருக்கிற இந்த ஊசிக்கு பேர் 'பல்லேடியம் நீடில்' இந்த பல்லேடியம் நீடில் போன வருஷம் மகாபலிபுரத்தில் ஒரு வெளிநாட்டு கிரிமினலை கைது செய்தபோது என்னோட கைக்கு கிடைச்சது. அபூர்வமான பொருள்களை கலெக்ஷன் பண்றதுல நாட்டம் இருந்த எனக்கு இந்த நீடிலை போலீஸ்ல ஒப்படைக்க மனசு இல்லை. வெச்சுகிட்டேன். இந்த பல்லேடியம் நீடில்தான் இன்னிக்கு சமுதாயத்தில் இருக்கிற தீமைகளை அடிக்கிற சுதர்சன சக்கரமாய் மாறியிருக்கு....''

ஈஸ்வரின் பேச்சைக் கேட்டு – பயத்தில் உறைந்து போயிருந்த உபயதுல்லாவையும் சண்முகராஜனையும் டிரைவர் நெருங்கினார்.

வலது கையை சாய்வாய் கத்தி மாதிரி உயர்த்தி வீசினார். முதலில் உபயதுல்லாவும் இரண்டாவது சண்முகராஜனும் ஒரு சின்ன முனகலைக் கூட வெளிப்படுத்தாமல் வேரற்ற மரம் போல் சாய்ந்தார்கள்.

ஈஸ்வர் பல்லேடியம் நீடிலோடு அவர்களை நெருங்கி கீழே உட்கார்ந்த விநாடி –

அவருடைய செல்போன் கூப்பிட்டது. நீடிலை இன்பமணியின் கையில் கொடுத்து காரியத்தை

முடிக்கும்படி சொல்லிவிட்டு செல்போனை உயிர்ப்பித்து காதில் பொருத்திக் கொண்டு நடந்தார்.

“ஹலோ...”

மறுமுனையில் டி.ஜி.பி. குலசேகரன் பேசினார்.

“மிஸ்டர் ஈஸ்வர்...?”

“ஹோல்டிங் ஸார்...”

“இப்ப நீங்க எங்கேயிருந்து பேசிட்டிருக்கீங்க?”

“அடையார்ல ஒரு முக்கியமான ஃபங்க்ஷன்ல இருக்கேன் ஸார்...”

“ஒரு அரை மணி நேரம் ஆபீஸுக்கு வந்துட்டு போங்க...”

“எனிதிங்க் இம்பார்ட்டண்ட் ஸார்?”

“காணாமே போன அருணா கிடைச்சுட்டாங்க. யாரோ கடத்திட்டு போயிட்டாங்களாம். எப்படியோ தப்பிச்சு வந்துட்டாங்க.”

“காட் ஈஸ் க்ரேட் ஸார்...”

“நீங்க உடனே புறப்பட்டு வர்றீங்களா?”

“ஃபங்க்ஷன் பத்து நிமிஷத்துக்குள்ளே முடிஞ்சுடும் ஸார். முடிஞ்சதும் வந்துடறேன்...”

“ப்ளீஸ்... வாங்க.”

ஈஸ்வர் செல்போனை அணைத்துவிட்டு திரும்ப, இன்பமணி கையில் நீடிலோடு நின்றிருந்தார். ஈஸ்வர் புருவங்களை உயர்த்தினார்... மெல்ல –

“என்ன...?”

“முடிஞ்சுது ஸார்...”

(முற்றும்)